பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 15 சனிக்கிழமை (30.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 35

# வாகரையிலிருந்து புலிகளை வெளியேற்றி கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல்

## கருணா கட்சியும் போட்டியிடும்

கொழும்பு,டிசெம்பர்30

வாகரைப் பிரதேசத்திலிருந்து விடுதலைப் புலிகளை வெளியேற்றுவதே அரசின் இப்போதைய முன்னுரிமைத் திட்டம் என்றும் -

அதன் பின்னர் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் - ஆய்வாளர்கள் தெரிவித்திருப்பதாக 'றொய்ட்டர்' செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடைபெறும் போது, விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்று இராணுவத்துடன் இணைந்து இயங்கும் கருணா குழுவின் அரசியல் கட்சியும் போட்டியிடும் என்றும் ஆய்வாளர் கருதுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கோட்டையாக விளங்கும் வாகரை, மிக விரைவில் இராணுவத்தின் கைவசம் வரும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கைத் தொலைபேசிச் சேவை மீண்டும் நேற்று இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாட்டில் நேற்றுமுன்தினம் மாலை செயலிழந்த 'டயலொக்' கைத்தொலைபேசிச் சேவை நேற்று மாலை மீண்டும் இயங்க ஆரம்பித்தது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகத் துண்டிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிச் சேவை கடந்த 25ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் ஓரளவு சீரடைந்தது.

இதனையடுத்து கைத்தொலைபேசிகள் மூலம் அழைப்புகளை மேற்கொள்வதிலும் அவற்றுக்கான பணம் மீள்நிரப்பும் அட்டை

(08ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் கனடா செல்ல அனுமதி மறுப்பு

கொழும்பு,டிசெ.30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனடா செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது


நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கனடா செல்ல சமர்ப்பித்த விண்ணப்பத்தை கனேடியத் தூதரகம் நிராகரித்துள்ளது.

இதற்குமுன்னரும் கனடா செல்வதற்கு அனுமதி கோரிய நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் வாழும் புலம் பெயர்ந்த மக்கள் அமைத்துள்ள பருத்தித்துறை வாழ் தமிழ் மக்கள் ஒன்றியம் கனடாவுக்கு வரு

(08ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு கடற்கரையில் நங்கூரமிட்டிருக்கும் 'பர்ஹா-III' சரக்குக் கப்பல் இதுதான்.



## சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் தொடர்ந்து ஊரடங்கு

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள ஊரடங்கு மறு அறிவித்தல் வரை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று பலாலி படைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

வியாழக்கிழமை இரவு 8 மணிமுதல் ஊரடங்கு அங்கு நடைமுறைப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை - ஏனைய பிரதேசங்களில் இரவு 8 மணிமுதல் அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என படைத்தலைமையகம் மேலும் தெரிவித்தது.(1)

# திருமலையில் அனல் மின்நிலையம் நிறுவ இந்தியாவுடன் நேற்று உடன்படிக்கை

## அமைவிடம் தொடர்பாக முடிவில்லை

கொழும்பு, டிசெ.30

நாட்டின் இரண்டாவது அனல் மின்நிலையத்தைத் திருகோணமலையில் நிறுவுவதற்கான இலங்கை - இந்தியக் கூட்டு உடன்படிக்கை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் - ஜனாதிபதி முன்னிலையில் - கைச்சாத்திடப்பட்டது.

அனல்மின்நிலையத்தைநிறுவுவதற்கான உடன்படிக்கைசெய்துகொள்ளப்பட்டபோதிலும் அதன் அமைவிடம் தொடர்பாக இன்னும் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாகப் பொருத்தமான இடம் தீர்மானிக்கப்படும் என்றும் அறியவருகிறது.

இந்திய தேசிய அனல் மின்சக்திக் கூட்டுதாபனத்தால் அமைக்கப்படவிருக்கின்ற

(08ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை, கிளிநொச்சியிலிருந்து கண்காணிப்பு பிரதிநிதிகள் கொழும்புக்கு

கொழும்பு,டிசெ.30

திருகோணமலை, கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் கொழும்புக்குத் திரும்பியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதால் உண்டான சிக்கல்களை அடுத்தே மேற்கண்ட இரண்டு மாவட்டங்களிலும் இருந்து குழுவின் பிரதிநிதிகள் கொழும்பு

(08ஆம் பக்கம் பார்க்க)

## அனல் மின்நிலையத்துக்கு எதிராக புத்தளத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிச. 30

அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் நுரைச்சோலை அனல் மின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று புத்தளத்தில் ஆர்ப்பாட்டமும், கண்டனப் பேரணியும் இடம்பெற்றன. நகரெங்கிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

ஜும்ஆத் தொழுகையை அடுத்து புத்தளம் பெரிய பள்ளிவாசலுக்கருகில் இந்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நிலைவரம் குறித்து நேற்று இராணுவத் தளபதி பலாலியில் ஆராய்வு



யாழ்ப்பாணம்,டிசெ.30

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

பலாலியில் கட்டளைத் தளபதிகள் மற்றும் படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்திய இராணுவத் தளபதி, எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து எடுத்து விளக்கினார்.

சிவில் நிர்வாக அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என

(08ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையில் கண்டனப் பேரணி



ஏ-15 பாதையைத் திறக்கக் கோரி வாகரையில் நேற்று கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றது. வாகரைப் பாடசாலையில் இருந்து ஆரம்பமான பேரணி வைத்தியசாலையில் முடிவடைந்தது. சுலோக அட்டைகளைத் தாங்கி மக்கள் பேரணியாகச் செல்வதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2006 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த உரும்பிராயைச் சேர்ந்த ஸ்ரீகலாதர் யோகேஸ்வரின் புதல்வியும் யா/ வசாவிளான் மத்திய கல்லூரி மாணவியுமான

**செல்வி சுஜீந்தா (ஜெனி)**

அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிரந்தர முகவரி: குரும்பசிட்டி கிழக்கு,
தற்காலிக முகவரி:
அரியாலை, யாழ்ப்பாணம்

நவரட்ணம் பாஸ்கரன் (மாமா),
திருமதி அன்னராணி பாஸ்கரன் (அத்தை)
(65168)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.புனித பத்திரிசியார்
கல்லூரி மாணவன்

**செல்வன்**
**தேவராஜா தியோப்பிளஸ் சியான்**

இவ்வருடம் (2006) நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 134 புள்ளிபெற்று சித்தியடைந்தமையையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். சியானைப் பாராட்டுவதோடு எதிர்வரும் பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வியில் உயர வாழ்த்துகின்றோம். இவருக்கு கல்வி புகட்டி, ஊக்கமூட்டிச் சித்தியடைய நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் யாவரையும் நன்றியோடு நினைந்து வாழ்த்துகின்றோம்.

16/19,மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

அம்மா,அப்பா,
அப்பம்மா,அம்மம்மா,ஐயா,
சித்திமார்,சித்தப்பாமார்,
றீகனண்ணா,மாமாமார்,மாமிமார்கள்.

(65154)

## ஏரோ லங்கா பயணிகள் கவனத்திற்கு

ஏரோ லங்கா பயணச் சீட்டுக்கள் மற்றும் அது சம்பந்தமான விவரங்களை இல.86, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள எமது யாழ். தலைமைக் காரியாலயத்தில் மட்டும் பெற்றுக்கொள்ளுங்கள்.இது தொடர்பான தவறான செய்திகளைப் பயணிகள் நம்பவேண்டாம் எனவும் மேலதிக தகவல்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். பயணிகள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தக்கொள்கின்றோம்.

021 222 6242
021 222 3984 (651201)

## அறிவித்தல்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை, சுன்னாகம்
2007 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம்
வாகன, மிருகவரி உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை, சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், தனியார் வைத்திய நிலையங்கள், வங்கிகள் போன்ற உயர் தொழில் நிறுவனங்கள் வியாபார வரிகளையும் வியாபார உரிமக் கட்டணங்களையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமங்களையும், தொழில்கள் மீதான வரிகளையும் எதிர்வரும் 31.03.2007 ஆம் திகதிக்கு முன் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறித்த திகதியின் பின்னர் மேற்குறிப்பிட்ட உத்தரவுப் பத்திரங்களை பெறத்தவறியோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

அத்துடன் தொழில் மாற்றம் செய்பவர்களும் புதிய தொழில் ஆரம்பிப்பவர்களும் தொழில் நிலையங்களை மூடுபவர்களும் உடனுக்குடன் சபைக்கு அறியத்தந்து ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

திருமதி ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்,
28.12.2006
(ச-51712)

### வலிகாமம் தெற்குப் பிரதேச சபை
### சுன்னாகம்/ உடுவில்/ ஏழாலை உப அலுவலகங்கள்
### ஆதனவரி அறிவித்தல்கள் - 2007

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச்சட்டம் இல.15 இன் பிரகாரம் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பாக, ஆதனவரி அறவிடு சென்ற வருடம் அறவிட்ட விகிதத்தின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2007 ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்துபவர்களுக்கு இவ்வருடத்திற்கான மொத்தவரியில் 10 வீதம் கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு கந்தாயத்திற்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தில் முதல் மாத இறுதிக்குள் செலுத்துபவர்களுக்கு அக்கந்தாயத்திற்கான வரியில் 5 வீதம் கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத்தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக்காணிகளுக்கும்15 வீதமும் ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக ஆதனவரியுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டம்.

வரியிருப்பாளர் தங்கள் ஆதனங்களுக்கான வரியை 31.01.2007 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பாக அந்தந்த அலுவலங்களில் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன். அத்துடன் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும், உரிமை மாற்றம் செய்பவர்களும் கட்டடங்கள் அமைப்பவர்களும் உடனுக்குடன் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கின்றேன்.

படவரைஞர்கள் யாவரையும் 2007 ஆம் ஆண்டுக்கான பதிவுகளை புதுப்பித்துக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

திருமதி ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்,
28.12.2006
(ச-51713)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2006 இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி மாணவனான

**சிவகுமார் தேனுகானன்**

அவர்களைப் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ பரராசசேகரப்பிள்ளையாரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

இணுவில். (65155)
சதா மாமா
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று தரம்5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய

**செல்வி**
**சிவானந்தன் கஸ்தூரி**

159 புள்ளிகளைப்பெற்று பாடசாலை மட்டத்தில் 2ஆம் இடத்தினைப் பெற்றுள்ள இவருக்கு பக்கபலமாக நின்று உதவிய அதிபர்,ஆசிரியர்களான திருமதி திருச்செல்வம், வே.அன்பழகன், செல்வி சசிரேகா ஆகியோருக்கும் நன்றி தெரிவித்து வாழ்துகின்றோம்.

வாழ்ந்துபவர்கள்
அப்பா, அம்மா( சயந்தி),
அம்மம்மா, சங்கர் அண்ணா
(65151)

## சதாபொன்ஸ் - அல்வாய்

A/L 2009 கலை, வர்த்தகப் பிரிவுகள் 04.01.2007 காலை 9 மணிமுதல் ஆரம்பமாகின்றன. பதிவுகள் இன்றுமுதல் நடைபெறும்.

நிர்வாகி.

## விற்பனைக்கு

DIO HONDA (ஸ்கூட்டி பெப் மாதிரி) பெண்களுக்கான Moter Bick, Made in Japan விற்பனைக்கு.150, ஸ்ரான்லி தெரு, யாழ்ப்பாணம்.222 2052

## விற்பனைக்கு

இல.QA XXXX தொடர் இலக்க முச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைத் பேசி எண்.
021 226 3395
021 226 4107
வல்வெட்டித்துறை.

## கண்ணீர் அஞ்சலி

வட்டு.கிழக்கு வட்டுமுத்துமாரி சேமிப்புக் கடன்குழு பொருளாளர்
திருமதி கமலாதேவி தில்லையம்பலம்
அவர்களின் அன்புத்தந்தை

**இளையதம்பி அப்புத்துரை**
(முருகந்தீ டல்புத்தூர்கிழக்கு)

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டு.முத்துமாரி சேமிப்புக்கடன்குழுவினர்.

கல்விமுதுமாணி-2005/06-
(தமிழ்மொழி மூலம்) வவுனியா வளாகம்
பட்டப்பின் டிப்ளோமா-2005/07
(பகுதிநேரம்I) -வவுனியா வளாகம்

கல்விமுதுமாணி-2005/06-
(ஆங்கிலம்,தமிழ்மொழிமூலம்)-யாழ்ப்பாணம்
பட்டப்பின் டிப்ளோமா-2004/06
(பகுதி நேரம் 11) யாழ்ப்பாணம்

மேற்படி கற்கை நிலையங்களில் மேற்குறிப்பிட்ட கற்கைநெறிகளை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களும் எதிர்வரும் ஜனவரிமாதம் 12ஆம்திகதி (வெள்ளி), 13ஆம் திகதிகளில் (சனி) காலை 9-12 மணிவரை பின்வருவோரில் எவரையேனும் ஒருவரை கட்டாயமாக சந்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

1. திரு.R.நந்தகுமார்,பீடாதிபதி/ முகாமைத்துவகற்கைகள் பீடம் வவுனியா வளாகம்.
2. பேராசிரியர் க. சின்னத்தம்பி,கல்விசார் இணைப்பாளர், வவுனியா வளாகம்.
3. [illegible] கள், யாழ்.பல்கலைக்கழகம்.

28.12.20006 பதிவாளர்.
(ச-51711)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை தரம் 5-2006 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி மாவட்ட நிலையில் பதினோராம் இடத்தைப் பெற்ற

**செல்வன்**
**கைலாயநாதன் டினோசன் (168 புள்ளி)**
**செல்வி**
**துளசிகா உருத்திரேஸ்வரன் (168 புள்ளி)**

ஆகிய இருவரையும் வாழ்த்துவதோடு பாடசாலையில் சித்தி பெற்ற 36 மாணவர்களையும் அண்மித்த புள்ளிகளைப் பெற்ற 68 மாணவர்களையும் பாராட்டுகின்றோம். அத்துடன் அவர்களை உரிய முறையில் நெறிப்படுத்தி சிறந்த பெறுபேற்றைப் பெற ஏணிப் படிகளாய் அமைந்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
(65138) யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.)
021-222 8250, 0777 222422

Branch office
No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Softwase Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw. ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 01/01/2007 - 09.00 AM

மாணவர்களின் நலன்கருதி எமது கிளை நிறுவனத்தினை இல 167,கஸ்தூரியார் வீதியில் (உதயன் பணிமனை அருகில்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள் அனைத்தும் எமது கிளை நிறுவனத்திலேயே நடைபெறும். அனுமதினை தலைமையகத்திலும் கிளை நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

3 மாதகால DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & Tally Accounting Package ஆரம்பமாகிறது.
START ON:- (1) 28/12/2006 (2) 30/12/2006 (3) 31/12/2006 (4) 01/01/2007


## மரண அறிவித்தல்கள்

### வ.சிங்கராசா (R.M.S.)



தையிட்டி,மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவிலில் வசித்துவந்தவருமான வல்லிபுரம் சிங்கராசா நேற்று(29.12.2006)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் -செல்லம்மா தம்பதியரின் மகனும் வீரசிங்கம் - வேமாவதி தம்பதியரின் மருமகனும் மங்களத்தின் அன்புக் கணவரும் காலமான கிரிஜா, அனுஜா (ஜேர்மனி), புஸ்பாவதி (ஆசிரியை யா/ வசாவிளான் ம.ம.வி), வனஜா (ஆசிரியை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), சகஜா (கனடா), ஜலஜா, சைலொளிபவனி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசமூர்த்தி(ஜேர்மனி), பாலமுரளி (ஜேர்மனி), சிவகுமார் (ஐங்கரன் களஞ்சியம்), சிவானந்தன் (G.S.), சிவானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் நித்திலன், கபிலன், அபிலாஷன், ஆதித்யா, பிருந்தாபன், யதுமதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று(30.12.2006) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் கொக்குவில் இந்துமயானத்தில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில். (65330)
தகவல்:
மனைவி, மங்களம்.

### பேரானந்தம் சிவானந்தம்



(ஓய்வுபெற்ற யாழ்.மாநகரசபை ஊழியர்)

யாழ்ப்பாணம், கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, கோணாந் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பேரானந்தம் சிவானந்தம் 28.12.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேரானந்தம் மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் பாக்கியலட்சுமி (சுவிஸ்) தம்பதியரின் மருமகனும் சத்தியதேவியின் அன்புக் கணவரும் உமைநேசனின் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்) அன்புத் தந்தையும் சிவபாக்கியம், அருளானந்தம் (ஓய்வுபெற்ற யாழ். மாநகரசபை ஊழியர்), பரமானந்தம் (ஆஸ்திரேலியா), விவேகானந்தம் (ஜேர்மனி) சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2006) ஞாயிறுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/9, மானிப்பாய் வீதி,
கோணாந்தோட்டம்,யாழ்ப்பாணம். (65328)
தகவல்:
சத்தியதேவி (மனைவி),
உமைநேசன்(மகன்).

### கந்தையா சின்னத்துரை



56/13, ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை நேற்று(29.12.2006)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கந்தையா - நாகம்மா தம்பதியரின் மகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் கலாதேவி, வாசதாதேவி, அமரர் ஜெசினாதேவி, ராஜ்குமார்(பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2006) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/13, ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம். (65333)
தகவல்:
ராஜ்குமார்(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு அரச அதிபர் கோரிக்கை

வலி. தென்மேற்கு,டிசெ.30

மாதகல் கடல் பிரதேசத்தில் குறுகிய தூரத்திலாவது அப்பகுதியிலுள்ள மீனவர்கள் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் படைத்தரப்பினிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாதகல் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலாளர் ஊடாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் -

மாதகல் கடலில் மீன் பிடிப்பத்றகு அனுமதி பெற்று தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதனையடுத்து, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மாதகல் கடல் பிரதேசத்தில் குறுகிய தூரத்தில் குறைந்த வலுவுள்ள வெளி இணைப்பு இயந்திரம் பூட்டிய படகுகளில் சென்று மீன் பிடிக்க அனுமதிக்கப்பட வேண் டும் என்றும், இப்பிரதேசத்தில மீனுக்கு பலத்தத்தட்டுப்பாடு நிலவி வருவதால் இதனை அனுமதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பாதுகாப்பு படை உயரதிகாரியிடம் கடித மூலம் வேண்டுகோள்விடுத்துள்ளார். (135)

*யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில்*

# கொரிய அரசின் வேலைதிட்டம் அடுத்தமாதம் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கொரிய அரசால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன என கல்லூரியின் அதிபர் வ.ஜோகராஜன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 21ஆம் திகதி கொரியாவின் இலங்கைக்கான .வதிவிடப்பிரதிநிதி ஹன்ஜங்ரை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

இச்சந்திப்பில் கல்லூரியின் புனரமைப்புக்கென ஒரு தொகுதி சீமெந்து, கம்பிகள் போன்ற பல மூலப் பொருள்களைத் தருவதற்கு கொரிய அரசு தீர்மானித்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

கல்லூரியின் வளாகத்தில் உபமின் நிலையத்தை அமைக்க தொழில்சார்ந்த தொழில்நுட்ப பயிற்சிக்கான அமைச்சுநிதி ஒதுக்கியுள்ளது.

33 இலட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபா செலவில் இந்த நிலையத்தை அமைப்பதற்கு அனுமதியும் கிடைத்துள்ளது. இந்நிதி யாழ். மின்சார சபையிடம் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (202-88-79)

# நெற்பயிர்களுக்கு நீர் இறைக்க எரிபொருள் கேட்கின்றனர்

வலி. தென்மேற்கு,டிசெ.30

மாதகல் பகுதியில் மழையின்மை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள நெற்பயிர்களுக்கு நீர் இறைப்பதற்குத் தேவையான மண்ணெண்ணையை விவசாயிகளுக்கு உரிய விலையில் பெற்றுக்கொடுக்க ஆவண செய்யுமாறு மாதகல் விவசாயிகள் சம்மேளனம் யாழ். அரச அதிபரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மழை இன்மையால் அவை அழிவடையும் நிலை தோன்றியுள்ளது.

இதனால் விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஆனால், அதற்குரிய மண்ணெண்ணையைப் பெறமுடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விவசாயிகளுக்கு விவசாய சம்மேளனங்களின் சிபார்சுக்கிணங்க பங்கீட்டு முறையில் எண்ணெய் வழங்கப்படவேண்டும். உரிய காலத்தில் மண்ணெண்ணெய் வழங்கப்படாதுவிடத்து விவசாயிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (203-135)

*பல்கலை. செயற்பாடுகள் தொடர்பில்*

# இராணுவத் தளபதியுடன் உபவேந்தர் ஆலோசனை

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். பல்கலைக்கழகத்தை அடுத்த மாதம் ஆரம்பிப்பது குறித்த கலந்துரையாடல் பல்கலைக்கழக உபவேந்தர் தலைமையிலான குழுவுக்கும் யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறிக்கும் இடையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இது தொடர்பாகத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வெளி மாவட்டங்களில் 800 இற்கும் அதிகமான மாணவர்கள் உள்ளனர். அவர்களை இங்கு அழைத்து வர இரு தடவைகள் கப்பல் சேவை நடத்தப்படவேண்டும் என பல்கலைக்கழகக் குழுவினர் யாழ். தளபதிக்குத் தெரியப்படுத்தினர்.

தலைமையகத்தின் அனுமதியைப் பெற்றதும் அதற்குரிய சகல நடவடிக்கைகளும் செய்து தருவதாக தளபதி தெரிவித்தார்.

மாணவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் இருப்பிட வசதிகளை யாழ். அரச அதிபர் பெற்றுக்கொடுக்க இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு வசதியாக ஊரடங்குச் சட்டத்தை இரவு 8 மணியளவிலிருந்து அதிகாலை 5 மணி வரை அமுல்படுத்த யாழ். தளபதி இணக்கம் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை யாழ். கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ். தளபதி தெரிவித்தார் - என்றுள்ளது. (202)

# மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.30

குடாநாட்டில் நடத்தப்பட்ட ஐந்தாம் தர விசேட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேலும் சில பாடசாலை மாணவர்களின் விவரம் வருமாறு:

**சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**

கே. கீர்த்தனா (164 புள்ளி), சி. கஸ்தூரி (159 புள்ளி), ர. சிருஸ்டிகா (157 புள்ளி), மோ.தர்மிகா (157 புள்ளி), த.கிரிசாந்த் (156 புள்ளி), ச. உஷாளினி (152 புள்ளி), த.நர்த்தனன் (150 புள்ளி), சி.விதுசா (146 புள்ளி), ம.விஜிகரன் (146 புள்ளி), ஜெ.ரம்யா (145 புள்ளி).

கோ. சுமித்தரன் (144 புள்ளி), சி.பவித்ரா (144 புள்ளி), சி. வேணுகோபன் (143 புள்ளி), த. தர்சன் (142 புள்ளி), ஞா. விவேந்தன் (142 புள்ளி), ப. கவிதா (141 புள்ளி), க. லக்ஸியா (140 புள்ளி), உதர்சாயினி (140 புள்ளி), க. நிதுசன் (139 புள்ளி), க.கஜூபன் (139 புள்ளி).

செ. கர்மினி (138 புள்ளி), சி. இளங்கோ (138 புள்ளி), வி. சிவசங்கீதா (138 புள்ளி), ஜெ. எழிலஜனி (138 புள்ளி), ப. திருத்தசி (138 புள்ளி), பா.ஜெயலக்சன் (138 புள்ளி), உ.அஜீபன் (137 புள்ளி), த. தனுராஜ் (137 புள்ளி), தி. நவலாஜினி (136 புள்ளி), ந. கனருபன் (135 புள்ளி).

ஆ.ஐங்கரன் (135 புள்ளி), ப.சஜீபனா (133 புள்ளி), ஜெ.சரண்யா (133 புள்ளி), த. கௌதமன் (133 புள்ளி).

**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

இ. கீர்த்திகா (148 புள்ளி), ந. கலிஸ்ரன் (137 புள்ளி).

**நாவற்குழி ம.வி.**

சற்குணநாதன் சஞ்சீவி (145 புள்ளி), மோகனதாஸ் டிசாளினி (133 புள்ளி), பிறேமதாஸன் ரகுலன் (130 புள்ளி), மதன் வலன்ரீனா (128 புள்ளி), சந்திரன் லக்ஷிகா (127 புள்ளி), நவரட்ணம் ஜெயநிஷாந்தன் (123 புள்ளி), சரவணமுத்து லதுஷன் (123 புள்ளி), இராமச்சந்திரன் கல்யாணி (122 புள்ளி), செல்வராசா லூஷியா (120 புள்ளி), இராசலிங்கம் பிரியந்தினி (119 புள்ளி), குணசேகரம் டுவாரதா (114 புள்ளி), மௌனகுரு தர்சிகா (112 புள்ளி), இரவீந்திரன் நிதர்ஸன் (110 புள்ளி), பாலரட்ணம் பிரியதர்ஷினி (109 புள்ளி), அன்ரன்ராஜ் புஸ்பமலர் (107 புள்ளி), இராமச்சந்திரன் கஸ்தூரி (101 புள்ளி).

**அச்சுவேலி மத்திய கல்லூரி**

செல்வி தி. மிதுஷா (156 புள்ளி), செல்வன் ச. பொன்மாறன் (152 புள்ளி), செல்வி மோ. விதுஷா (141 புள்ளி), [illegible] (138 புள்ளி), [illegible] (134 புள்ளி), செல்வன். சி. புவிராஜ் (134 புள்ளி).

# செய்திக்கொத்து

## 150 மெற்றிக்தொன் உரம் வருகின்றது

யாழ்பபாணம், டிசெ.30

குடாநாட்டு விவசாயிகளின் நன்மை கருதி மேற்கு நிலப்பயிர்ச் செய்கைக்கென 150 மெற்றிக் தொன் உரம் 12 மெற்றிக் தொன் கிருமிநாசினியும் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளன.

இவற்றைக் கப்பலில் ஏற்றும் பணிகள் தற்போது நடைபெற்றுவருவதாக கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆயைளார் பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

உரம், கிருமிநாசினி ஆகியவை வந்து சேர்ந்ததும் அவை கமநல கேந்திர நிலையங்கள் மூலம் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை இனங்கண்டு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (1-8)

## கத்திமுனையில் நகைகள் திருட்டு

தென்மராட்சி, டிசெ.30

வீட்டில் உள்ளோரை கத்தி முனையில் பயமுறுத்தி அங்கிருந்த ஆணொருவரை மரத்துடன் கட்டிவிட்டு வீட்டிலிருந்த தங்கநகைகள், பணம் ஆகியவை திருடர்கள் அபகரித்துச் சென்றனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

இத் திருட்டுத் தொடர்பாக சிவபாதம் என்பவரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

திருடர்கள் கொண்டு வந்த மிதிவண்டியினை அங்கு விட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 312 பேருக்கு சுயதொழிலுக்கு உதவி

யாழ்ப்பாணம், டிசெ.30

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பருத்தத்துறை கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 312 பேருக்கு அறவழிப் போராட்டக் குழுவின் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சுயதொழில் மேம்பாட்டுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 312 குடும்பங்களுக்கு 82 கட்டுமரங்கள், மீன்பிடி உபகரணங்கள், மற்றும் ஏனைய தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை-

கடந்த ஜனவரி ஆரம்பிக்கப்பட்ட மேற்படி திட்டம் இந்த மாதத்துடன் நிறைவடைகின்றது என குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தெரிவித்தார். (202)

## நீரிழிவு நோயாளர் பெரிதும் பாதிப்பு

வலி.தென்மேற்கு, டிசெ.30

நீரழிவு (சலரோகம்) நோயாளர்கள் பயன்படுத்தும் ஆட்டாமா மற்றும் குரக்கன்மா ஆகிய உணவுப் பொருள்களுக்கு யாழ். மாவட்டத்தில் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆட்டாமா கொழும்பிலிருந்து எடுத்துவரப்படாமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் - அதிக விலைகொடுத்தும் இதனை பெற முடியாதுள்ளதாகவும் இப்பிரதேசத்திலள்ள நீரிழிவு நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை -

குரக்கனையும் பெற முடியாதிருப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

நீரிழிவு நோய்க்கான மருத்துக் குளிசைகளுக்கும் யாழ். மாவட்டத்தில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. தனியார் பாமஸிகள் பலவற்றில் இம்மருந்துகள் இல்லாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (135)

## வழிகாட்டல் கருத்தரங்கு

குருநகர், டிசெ.30

இலங்கை கணக்காளர் சேவை ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் இங்கு தொடர்ந்தும் நடைபெறவுள்ளன. (1-51)

## ஜெயந்தி தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.30

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 128 ஆவது ஜெயந்தி தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை [illegible] கடவுள் சந்நிதியில் [illegible] தலைமையில் நடைபெறவுள்ளது. (202)

## மருத்துவ முகாம்கள்

தென்மராட்சி, டிசெ.30

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மீசாலைப் பிரிவு மக்களுக்கான இலவச மருத் துவ பரிசோதனை முகாமினை நாளை ஞாயிற்றுக்கிழமை மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

கண், நீரிழிவு, தொழுநோய், இரத்த அழுத்தம், சிக்குன்குனியா ஆகிய நோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு, மண்டுவில், கெருடாவில், சாவகச்சேரி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொள்ளுமாறு கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.30

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் சிக்குன்குனியா மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிதொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை தம்பாட்டி, நாரந்தனைக் கிராமத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி கே.ராஜரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இம்முகாமில் சிக்குன்குனியா மருத்துவப் பரிசோதனையும் மருத்துவ வழங்கலும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறும். (202)

## வரணியில் பாண் 35 ரூபா

உடுப்பிட்டி, டிசெ.30

வரணிப் பிரதேசத்தில் 1 இறாத்தல் பாண் 35 ரூபாவுக்கு விற்கப்படுவதாக நுகர்வோர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

தற்போது பேக்கரிகளுக்கு அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய போதியளவு மா வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வரணியில் வர்த்தக நிலையமொன்றில் 35 ரூபாவுக்கு பாண் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டுமென நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர். (202-155)

## சுயமுன்னேற்ற நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.30

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவன வடபிராந்திய இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் மாணவர்கள், இளைஞர்கள், பெரியோர் அனைவருக்கும் பயனுள்ள சுயமுன்னேற்ற நிகழ்வு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.50 மணிமுதல் திருநெல்வேலி சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (1-203)

## சமாச அலுவலகத்தில் விநியோகம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்.மாவட்ட நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் இடம்பெற்று வந்த அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் இன்று வியாழக்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக சமாசத்தலைவர் அறிவித்துள்ளார்.

சமாசக் களஞ்சியத்தின் வருடாந்த இருப்பு மதிப்பீடு மற்றும் கையிருப்பில் இருந்த அத்தியாவசியப் பொருள்கள் குறைவடைந்தமை ஆகிய காரணங்களுக்காகவே விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் விநியோகம் ஆரம்பிக்கபடும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (1-8)

## மருந்துக் கலவையாளர் 30 பேர் நியமனம்

வலி.தென்மேற்கு, டிசெ.30

தமது ஒரு வருட கால பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 30 மாணவ மருந்துக் கலவையாளர்களுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றுவதற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இவர்களை குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் தற்காலிகமாக பணிபுரியும்படி யாழ். சுகாதார சபைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் கடித மூலம் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு அரசினர் வைத்தியசாலைகளிலும் மருந்துக் கலவையாளருக்கான வெற்றிடங்கள் பல நீண்ட காலமாக நிரப்பப்படாது இருநது வருவது குறிப்பிடத்தக்கது. (135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
### 2007ஆம் ஆண்டு பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

**காலம் : 03.02.2007 சனிக்கிழமை**
**நேரம் : பிற்பகல் 2 மணி**
**இடம் : யாழ். வணிகர் கழகம்**

அன்பான வேண்டுகோள்:
01. ஆராய வேண்டிய விடயங்கள் இருப்பின் அங்கத்தவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 08.01.2007 க்கு முன் கழகப் பணிமனையில் சமர்ப்பிக்கவும்.
02. அங்கத்தவர்கள் மட்டுமே வாக்களிக்கவும் தெரிவில் இடம்பெறவும் அனுமதிக்கப்படுவர்.
03. நிகழ்ச்சி நிரல் அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். சகல கழக அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளித்து வலுவான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்பீர்.

*165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.* **யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 19 - 07 - 1931



இறப்பு 01 - 12 - 2006

### திருமதி பிலிப் அந்தோனியாப்பிள்ளை

எமது தாயின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து துயரில் எம்முடன் பங்குகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் வெளிநாடுகளில், கொழும்பில் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மரணச் சடங்கு வேளையில் ஒத்துழைப்பு வழங்கிய உறவினர்கள், அருட்தந்தை பெனற் கொன்சன்ரைன் (அமெரிக்கா), பங்குத்தந்தை R.H. சகாயநாயகம் அடிகளார், இறுதி இரங்கல் திருப்பலி நிறைவேற்றிய அருட்தந்தை B.F. பொனிவெஸ் அடிகளாருக்கும், அம்மாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபித்த அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் அனைவருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட செயி.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தெக்னோவின் நண்பர்கள், பக்தி சபையினர், பங்கு மக்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகள்.

31ஆம் நாள் நினைவுத் திருப்பலி இன்று 30.12.2006 காலை 6 மணிக்கு புதுமை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல்:
திருமதி யூஜின் யூலியஸ்.
(ஆசிரியை - செய்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை).

(65251)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி லலித்தா ரஞ்சனா சந்திரராஜா

திருமதி லலித்தா ரஞ்சனா சந்திரராஜா 23.12.2006 அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சந்திரராஜாவின் அன்பு மனைவியும் வர்னுஜா, தாட்சாயினி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற செல்லையா-பாக்கியம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சின்னையா-திரவியம் தம்பதியரின் அன்பு மருமகளும் மணி (லண்டன்), ரவி (லண்டன்), ரூபன் (லண்டன்), ரூபனா (லண்டன்), ஜெயா, மோகன் (பிரான்ஸ்), ராயு (பிரான்ஸ்), தர்சி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திரா, சந்திரசிறி (கனடா), சந்திரமோகன், றெஜிந்திரன் (கனடா), றஞ்சினி, றெஜினா ஆகியோரின் அன்பு மைத்துனியும் துரைசிங்கம், பரமேஸ்வரன், சிறிகாந்தன், தேவராஜா, நித்தியமாலா (கனடா), சுகிர்தினி(கொழும்பு) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.12.2006 சனிக்கிழமை கனடாவில் ரொரண்ரோ நகரில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சுதுமலை தெற்கு,*
*அண்ணாமலை வீதி,*
*மானிப்பாய்.* (65301)

தகவல்:
றஞ்சினி சிறிகாந்தன்.

### திருமதி துரைச்சாமி இலட்சுமிப்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியை)

சபாபதி துரைச்சாமியின் (இளைப்பாறிய முகாரி, நீர்வேலி காமாட்சி கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம்) அன்பு மனைவி இலட்சுமிப்பிள்ளை 27.12.2006இல் காலமானார்.

அன்னார் சத்தியதேவி (லண்டன்), மோகன் (பஹ்றேன்), சுலோஜனா (ஆசிரியர், யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), துஷாந்தி (ஆசிரியர், மு/பாலிநகர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2006) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உடுவில் வடக்கு,*
*சுன்னாகம்.* (65303)

தகவல்:
ச.துரைச்சாமி.
(கணவர்)

### ஐயம்பிள்ளை அன்னலிங்கம்



மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை அன்னலிங்கம் 28.12.2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமகளின் அன்புக் கணவரும் ஐயம்பிள்ளை-காலஞ்சென்ற இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மதீசன் (யாழ்.பல்கலைக்கழகம்-கலைப்பீடம் 2ஆம் வருடம்), நிஷாந்தன், கீர்த்தனன், சசிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராசா (மைதிலி நகைமாடம்), சுந்தரலிங்கம், இராசலிங்கம் (நானேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.12.2006 வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*465/20, கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (65243)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

---

## முக்கிய அறிவித்தல்

தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது உற்பத்தியான V.S.P நல்லெண்ணைக்குரிய மூலப் பொருளான எள்ளு வரத்தின்மையால் எமது உற்பத்தி நிறுத்தப்பட்டு ஸ்தாபனம் மூடப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி V.S.P என்ற பெயரில் போலி எண்ணை விற்பனைக்கு வந்துள்ளது. எனவே வாடிக்கையாளர்கள் அதனை நம்பி ஏமாற வேண்டாம் என்று அறியத் தருகின்றோம்.

**பரிமளா ஸ்ரோரீஸ்**
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

அச்சுவேலி தம்பாலையைச் சேர்ந்த ஜெயராசா எஸ் சீ வாசன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (601792770 V) அச்சுவேலிக்கும் நெல்லியடிக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சூர்யா பார்மஸி, பஸ்நிலையம், அச்சுவேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## வீடும் காணியும் விற்பனைக்கு

மானிப்பாய் கட்டுடையில் ஆறுபரப்புக் காணியும் அதோடு சேர்ந்த அனைத்து வசதியும் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை தயவுசெய்து நேரில் தொடர்பு கொள்ளவும்.

**கந்தையா இலட்சுமணன்**
சமாதான நீதவான், யூ.என்.எச்.சி.ஆர் தண்ணீர் தாங்கிக்கு அருகில், கட்டுடை, மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி



நடிக கலாமணி, கலைஞான கேசரி

**வடிவேலு செல்வரத்தினம்**

எமது தந்தை கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களுடன் பல்லாயிரக் கணக்கான மேடைகளில் திறம்பட நடித்து பெரும் புகழீட்டிய நடிக கலாமணி, கலைஞான கேசரி வடிவேலு செல்வரத்தினம் அவர்களின் பிரிவு எமக்குப் பெரும் துயரத்தைத் தந்துள்ளது. அவரது மறைவு கலை உலகிற்குப் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாரங்கா,
காங்கேசன்துறை.

வி.வி.வைரமுத்து
குடும்பத்தினர்.

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி, கல்வயல், வேதவனப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடை பெற்று வருகிறது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (202)

* * *

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலய திருவாதிரை தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்திற்குச் செல்லும் பகுதியில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக வுள்ள இராணுவக் கடற்படை முகாமில் பக்தர்கள் தமது தேசிய அடையாள அட்டையை ஒப்படைத்து விட்டு வரதராஜப் பெருமாள் கோயிலை நோக்கி அரை மைல் தூரம் நடந்தே செல்ல வேண்டும்.

* * *

புலோலி உதய கதிர்காமம் தான் தோன்றீஸ்வர சக்கர சண்முகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு ஆனந்தராஜா**

பிறப்பு : 16.11.1950 இறப்பு : 13.01.2003

திதி : ஏகாதசி 30.12.2006

பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பின் உறைவிடமாய்
எம்மை நிலைப்படுத்திய – எங்கள்
அன்புத் தெய்வத்தின் நினைவுகள்
என்றும் எம் உள்ளத்தில் நீங்கா
நினைவுகளாய் உள்ளன.

என்றும் நீங்கா நினைவுடன்,
குடும்பத்தினர்.

(65215)

## துயர்பகிர்கின்றோம்



**Rtr. திருமதி ஜெகநாதன் சிவவதனி**
(றோட்டரக்ட் கழக முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர்)

அன்னார் மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

றோட்டரக்ட் கழகம்.
சுன்னாகம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**சிவசுப்பிரமணியம் பார்வதிப்பிள்ளை**

மண் மகிழ 04.06.1931 — மண் நெகிழ 30.11.2006

திதி : தசமி

ஆலமரம் போல் நிழல் தந்து அரவணைத்து
எம்மை வாழ வழிகாட்டிய எம் குடும்ப ஒளிவிளக்கே!
உங்கள் உடல் மண்ணில் மடிந்தாலும்
உங்கள் நினைவுகளும் பாசங்களும் என்றும்
எம் நெஞ்சங்களில் .....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வேலி வடக்கு.
நீர்வேலி. (65309)

குடும்பத்தினர்.

## காணவில்லை



எனது மகன் இராசரத்தினம் ஈழவேந்தன் வயது 23 (01.08.1983) கடந்த 08.12.2006 அன்று யாழ்ப்பாணம் பாரவூர்திச் சங்கத்திற்கு சென்று பதிவு செய்துவிட்டு வரும் வழியில் காணாமற் போயுள்ளார். நாங்கள் இருவரும் வயோதிபர்கள் நோய்வாய்ப் பட்டவர்கள். எமக்கு உதவிக்கு எவருமில்லை. ஆகவே எமது மகனின் விடுதலைக்கு உதவி செய்யும்படி சம்பந்தப் பட்டவர்களை அன்பாக வேண்டுகிறோம்.

*மாரியம்மன் வீதி.*
*அளவெட்டி தெற்கு, அளவெட்டி.* (65249)

தகவல்:
தாய், தந்தை.
க.இராசரத்தினம்

## மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

அமரர்

**முருகுப்பிள்ளை இராசையா (V.M.R)**
(பிரபல புகையிலை வர்த்தகர்)



மாலந்தெணி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வத்தனை, பருத்தித்துறையைப் புகுமிடமாகவும் தற்காலம் பிரதானவீதி, மந்திகையை வாழ்விடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை இராசையா 26.12.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாலந்தெணியூர் முருகுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற வத்தனையூர் முருகுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பரம்சோதி, கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கார்த்திகேசு (தபால் அதபர்), தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற சமூக சேவை அலுவலர்), சோமசுந்தரம் (கட்டடக் கலைஞர்), குழந்தைநாயகி, தனபாக்கியம், வயிரமுத்து (கனடா), திருநாவுக்கரசு (சுவிஸ்), சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் யசோதா, ரமேஸ் (கனடா), ரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உமாசங்கர் (கிராம அலுவலர்), மாலா (கனடா), வாசுகி (லண்டன்) ஆகியோரின் மாமனும் சங்கீதா, சகானா, ஹம்சவி, மாதுனா, வத்சாயினி ஆகியோரின் பாசமிகு பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் மந்திகை இல்லத்தில் 27.12.2006 புதன்கிழமை நடைபெற்று, தகனக்கிரியை கருகம்பன் இந்து மயானத்தில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எமது குடும்பத்தலைவரின் திடீர் இழப்பினால் நாம் துயருற்றிருந்தவேளையில் ஓடோடி வந்து உதவியோர், துயர் தீர ஆறுதல் கூறியோர், இரங்கற் செய்திகள் வெளியிட்டோர் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைச் செலுத்துகின்றோம்.

மந்திகை. (65223)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரியாக
இரு தசாப்தங்களாக பணியாற்றி ஓய்வுபெறும் மருத்துவ உலகின் மணி மகுடம்

# வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை அவர்களுக்கான

# சேவை நலன் பாராட்டு விழா சிறப்பிதழ்



## பாராட்டுக்கும் பெருமதிப்புக்குமுரியவர்



எங்கள் மண்ணை விளங்கவைத்துக் கொண்டிருக்கும் ஒரு சில சேவையாளர்களை நாம் அடிக்கடி பாராட்ட வேண்டியிருக்கிறது. அவர்களில் ஒருவராக இந்த நாடு போற்றும் சேவையாளராக விளங்குபவர் டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை அவர்கள்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் இந்த மண்ணின் பல பகுதிகளில் சேவை முத்திரை பதித்தவராகவும் விளங்குபவர் இவர். இவருடைய புன்முறுவலினாலும் அமைதியான பேச்சினாலும் நோயாளர்கள் சுகம் அடைந்து விடுகிறார்கள். நீண்டகாலம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சேவை முத்திரை பதித்தவர் இவர். தற்போது சில காலமாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் கடமை புரிந்து அனைவரது பாராட்டையும் பெற்றுவருகிறார். இப்பெரியாரின் சேவை ஒளிவீசும் பொற்காலத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன். மேலும் மேலும் ஐயாவின் சேவை எம் மண்ணை மகிழ்விக்க வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா.

## சேவையின் சிகரமாக வாழ்ந்து காட்டியவர்



கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக மாவட்ட வைத்திய அதிகாரியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையிலும் தனது மகத்தான சேவையை வழங்கிய மூத்த வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்வது சுகாதாரத் திணைக்களத்திற்கும் இம்மாவட்ட மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

தனது அளப்பரிய சேவையினால் இம்மாவட்டத்தில் அனைவராலும் அறியப்பட்டவர்; மதிக்கப்பட்டவர்; தனது முதிர்ந்த வயதிலும் உழைப்பால் உயர்ந்து நின்றவர். புகழ் பூத்த அவரது பணி இம்மாவட்ட மக்கள் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும். மருத்துவப் பணி மட்டுமன்றி ஆன்மீகப் பணிகளிலும் சமூக நலப் பணிகளிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

சேவையின் சிகரமாக வாழ்ந்து காட்டிய பெருந்தகை அவர். அவரது அளப்பரிய சேவை இம்மாவட்ட மக்களால் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரப்படும். அவருக்கு இறைவன் சகல சௌபாக்கியங்களையும் நல்ல ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டி நிற்கின்றேன்.

கே.கணேஷ்
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

## கண்ணியம் மிக்க மனிதர்



வைத்தியகலாநிதி சின்னத்துரை கதிரவேற்பிள்ளை கண்ணியம்மிக்க ஒரு மனிதர். கடந்த நான்கு வருடங்களாகப் பருத்தித்துறை நீதிவான் என்ற முறையில் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இந்தக் காலத்தில் வைத்திய கலாநிதி நோயாளர்களுடனும், ஊழியர்கள், உத்தியோகத்தர்களுடனும் பழகும் தன்மை என்னை மிகவும் கவர்ந்தது. 72 வயது கடந்த நிலையிலும் நிதானமாகவும், துடிப்புடனும் செயற்படும் தன்மை போற்றுதற்குரியது.

நீதிமன்றத்திற்கு அணைக்கவேண்டிய சட்டவைத்திய அறிக்கைகள், பிணப் பரிசோதனை அறிக்கைகள் என்பவற்றினை உடனுக்குடன் அனைத்து நீதிமன்றச் செயற்பாடுகள் ஒழுங்காக நடக்க உதவி புரிந்துவந்தார். சேவை மனப்பான்மை மிக்க, முதிர்ந்த அனுபவம்மிக்க ஒரு வைத்திய கலாநிதி மந்திகை ஆதாரவைத்தியசாலையை விட்டுச் செல்வது பேரிழப்பாகும்.

நீண்ட காலம் வைத்தியப் பணியாற்றி வடமராட்சி மக்களுக்கு சேவைபுரிந்த வைத்தியகலாநிதி சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றாலும் பூரண சுகதேகியாக மேலும் பல ஆண்டுகள் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க.அரியநாயகம்
மாவட்ட நீதிவான், பருத்தித்துறை.

## மருத்துவ உலகின் மணிமகுடம்



சுகாதாரத் திணைக்களத்தின் நீண்ட காலமாக வைத்திய அதிகாரியாக பணியாற்றி தனது 73 ஆவது வயதில் ஓய்வுபெறுகிறார் வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை அவர்கள்.

கடந்த இரு தசாப்தங்களாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் அதற்கு முன் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையிலும் மாவட்ட வைத்திய அதிகாரியாக பணியாற்றி இம்மாவட்ட மக்களுக்கு அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார்.

மிகவும் நெருக்கடியான கால கட்டங்களில் இரவு பகலாக தனது உயிரையும் பணயம் வைத்து அவர் இம்மாவட்ட மக்களுக்கு ஆற்றிய பணி அளப்பரியது. தனது முதிர்ந்த வயதிலும் தளராத மன உறுதியுடன் மக்களின் நலன்காக்க இன்றுவரை உழைத்தவர். "மந்திகை" என்றால் "கதிரவேற்பிள்ளை" என்று கூறுமளவுக்கு அவரது வாழ்க்கை இவ்வைத்தியசாலையுடன் ஒன்றிப்போனது. மருத்துவ உலகின் மணி மகுடமாக வாழ்ந்தவர்.

மருத்துவப் பணியுடன் நின்றுவிடாது சமய, சமூக, பொதுப்பணிகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர். இம்மாவட்ட மக்களுக்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவைகளுக்காக சுகாதாரத் திணைக்களம் நன்றி நவில்கின்றது. அவரது ஓய்வுகாலத்தில் இறைவன் அவருக்கு நல்ல ஆரோக்கியத்தையும் அமைதியான வாழ்வையும் வழங்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
மாகாணப் பிரதிப் பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

## மக்கள் உள்ளங்களில் இடம்பிடித்தவர்



இரண்டு தசாப்தங்களாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றி பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தனது அர்ப்பணிப்பு மிக்கசேவையினை வழங்கி மக்களின் உள்ளங்களில் ஆழமான இடத்தினைப் பிடித்திருப்பவர் வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை அவர்கள்.

மருத்துவத்துறையில் நீண்ட அனுபவமும், ஆற்றலும், அறிவும் , தொழில்பற்றும் அவரின் சிறப்புக்கும் பெருமைக்கும் காரணமாக அமைந்துள்ளன. அன்பான வார்த்தைகள், ஆதரவான பேச்சுக்கள், பண்பான நடத்தைகள், பணிவான செயல்கள் என்பவற்றினை சொத்துக்களாக கொண்டதனால் வாழ்க்கையில் உயர்வடைந்து பெருமை பெற்று நிற்பவர் வைத்தியகலாநிதி அவர்கள். தனது தொழிலுக்கு மேலதிகமாக ஆன்மீகத் துறையிலும் தனது பங்களிப்பினை வழங்கி ஆலயங்களில் நடைபெறும் பல்வேறு சமய நிகழ்வுகளிலும் பங்குபற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். அவரின் சமூக, சமய பணிகள் தொடர நீண்ட ஆயுளை இறைவன் வழங்கவேண்டி நிற்பதுடன் அவரின் சேவையினைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி செய்கின்றேன்.

சி.சத்தியசீலன்
பிரதேச செயலர்,கரவெட்டி

### வைத்திய கலாநிதி சின்னத்துரை கதிரவேற்பிள்ளை
### வாழ்க்கை / சேவை வரலாறு

| | | |
|---|---|---|
| * பிறப்பு | - | 16.11.1933 |
| * இடம் | - | கோலாலம்பூர், மலேசியா. |
| * ஆரம்பக் கல்வி | - | மெதடிஸ்த பாடசாலை, மலேசியா. |
| * இலங்கை வருகை | | - 12.04.1946 |
| * ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை | | - 1946 - 1955 |
| * வைத்திய கல்லூரி, கொழும்பு | | - 1955 - 1961 |
| * வைத்தியராக நியமனம் பெற்ற திகதி | | - 15.04.1961 |
| * பெரியாஸ்பத்திரி, கொழும்பு | | - 1961 - 1962 |
| * மாவட்ட வைத்தியசாலை, அவிசாவளை | | - 1962 - 1965 |
| * தொற்றுநோய் வைத்தியசாலை, அங்கொட | | - 1965 - 1969 |
| * சுகாதார வைத்திய அதிகாரி, கிளிநொச்சி | | - 1969 - 1971 |
| * மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி | | - 1971 - 1974 |
| * ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை | | - 1975 - 1980 |
| * ஆதாரவைத்தியசாலை, திருகோணமலை | | - 1980 - 1982 |
| * மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை | | - 1983 - 1987 |
| * ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை | | - 1987 - இற்றை வரை. |

## ஆதாரவைத்தியசாலைக்கு ஆதாரக் கைகொடுத்தவர்



வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை அவர்கள் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாகப் பெரும் பணியாற்றி மக்கள் மனங் கவர்ந்த மருத்துவராக விளங்கினார். தமது பதவிக் காலத்தின் பெரும் பகுதியில் தனியொரு மருத்துவராக இருந்து காலநேரம் பார்க்காது காத்திரமான பணியாற்றியவர். பகலென்றும் இரவென்றும் பாராது சலிக்காது நோயாளரின் நோய் தீர்த்தவர். தமது உத்தியோகக் கடமைகளுக்கப்பால் மனித மனங்களில் நீக்கமற நிறைந்திருந்தார். சிறப்பாக நோயாளர் இதயங்களில் இடையறாது இடம்பிடித்தார்.

அன்னாரது பதவிக் காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களினாலும் அவலங்களினாலும் வைத்தியசாலையில் நெருக்கடி நிலை தோன்றிய சந்தர்ப்பங்களில் அவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்துச் சேவையாற்றியவர்.

குறிப்பாக 'சுனாமி' என்ற கடற்கோள் அனர்த்தத்தினால் வடமராட்சிக் கரையோர மக்கள் கடுமையான நோய்ப் பாதிப்பிற்குள்ளான வேளையில் இன்முகத்துடன் அயராது பணியாற்றிப் பெருந்தொகையான நோயாளர்களின் நோய் தீரச் சிகிச்சையளித்தவர்.

1999 - 2000ஆம் ஆண்டு காலப் பகுதியில் வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் தலைவராகப் பதவியேற்றுச் சிறந்த தலைமைத்துவப் பண்புகளுடன் கழகத்தை வழிநடத்தியவர். தற்போதும் வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் முன்னெடுக்கப்படும் மருத்துவ முகாம்களை முன்னின்று நடத்துபவர். தாம் சார்ந்த இந்துமதத்தில் பற்றுறுதி பூண்டவர். வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள ஆலய அபிவிருத்தியில் அக்கறையுடன் செயற்பட்டவர். ஆசாரசீலராக இருந்து மக்கள் சேவையை மகேசன் சேவையாக்கியவர்.

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை வரலாற்றில் கதிரவேற்பிள்ளை அவர்களின் ஆட்சிக்காலம் மறக்கமுடியாதது; பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியது. அவர் பதவி வகித்த காலத்தைக் கதிரவேற்பிள்ளை சகாப்தம்'' எனக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமானதே. நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செய்த எமது வைத்தியக் கலாநிதி தமது ஓய்வு காலத்தில் எல்லா நலங்களும் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் க.தணிகாசலம்
உப தலைவர்,வைத்தியசாலை அபிவிருத்திக்குழு,
ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை

[05222]

வாழ்த்துவோர் :
வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.

## புனிதமான சேவைக்கு வாழ்த்து



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஞானபண்டித சேவாசுரபி, அகில இலங்கை சமாதான நீதிவான் சின்னத்துரை கதிரவேற்பிள்ளை அவர்களின் 20 வருட சேவை நலன் பாராட்டி ஆசியுரை வழங்குவதில் நான் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

எங்கள் வேதாகமத்தில் சீராக் ஆகமத்தில் 38:3 இல் இப்படிக் கூறப்படுகின்றது: ''மருத்துவரின் அறிவாற்றல் அவர்களைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்கிறது; பெரியோர்கள் முன்னிலையில் அவர்கள் வியந்து பாராட்டுப் பெறுவார்கள்.''

இவ்வார்த்தைகள் இன்று நிறைவேறுகின்றன. இதற்கேற்ப பருத்தித்துறை பங்குத்தந்தையாகிய நானும் இவரது புனிதமான சேவையை முன்னிட்டு வாழ்த்துகின்றேன். இறை ஆசீர் வழங்குகின்றேன்.

''இறைவன் நிறை ஆசிர் இவரோடு என்றும் இருப்பதாக.''

அருட்பணி ப.இருதயதாஸ்
பங்குத்தந்தை, பருத்தித்துறை.

## நீண்டகால சேவைக்கு வாழ்த்து



டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை புலோலி ஆதார வைத்தியசாலை யில் கடமை புரிந்த காலத்தில் பல தடவைகள் இவரைச் சந்தித்து உதவிகள் பெற்றோம். நாம் கேட்ட வைத்திய உதவிகளைப் புரிந்துள்ளார்.

''அரசன் எவ்வழி குடிமகன் அவ்வழி'' என்பது ஒரு வாக்கு மிகவும் மனவருத்தத்துடன் தெரிவிக்க வேண்டிய கடமைப்பாடு அடியேனுக்கு உண்டு. இன்று நாம் படும் அல்லல்களுக்குக் காரணம் அரசியலில் ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படாமையே. இப்படியான இழுபறி நிலையால் இதைச் சாக்குப் போக்காக வைத்து ஒரு சமுதாயம் எமது நாட்டில் உருவாகிவிட்டது.

டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை தம்மால் இயன்ற அளவு சேவை புரிந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் சேவை புரிந்த காலகட்டம் மிகவும் இருள் சூழ்ந்தது. இப்படியான சூழலில் இவர் பல அனுபவம் பெற்றிருப்பார். இவரது நீண்டகால சேவைக்கு அடியேனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்னையின் அடியவன் சித்ரூபானந்தா
ஸ்ரீ இராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.

## மக்கள் நலன் நாடி உழைத்தவர்



பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியாக நீண்ட காலம் பணியாற்றிவரும் வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை அவர்கள் நேர்மையுடனும் கடமையுணர்வுடனும் தனது மருத்துவப் பணியை ஆற்றி வந்துள்ளார். நெருக்கடிகள் மிகுந்த கடந்த காலத்தில் தமது சிரமத்தையும் பாராது அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மருத்துவ உதவிகளை வழங்கி வந்துள்ளார்.

மக்களுக்குச் சவாலாகப் பல நோய்கள் பரவக்கூடிய காலங்களில் நோய்வருமுன் தடுப்பதற்கான பல முயற்சிகளைச் சிறப்பாக மேற்கொண்டு அதன் நற்பலன்களை மக்கள் பெறச் செய்தார். யாழ்.மாவட்டத்தில் மருத்துவ அதிகாரிகளுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவிவரும் வேளையில் பல பொறுப்புக்களையும் மருத்துவ சேவையில் ஏற்று இப்பணியை ஆற்றியமைக்கு மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

அவருக்குச் சமூகப் பணியில் இருந்த ஆர்வம் காரணமாக வடமராட்சி அரிமாக் கழகத்தில் தன்னை இணைந்துக் கொண்டு பல இலவச மருத்துவ சேவை நிகழ்வுகளையும் நடத்தி அக்கழகத்தின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். அவருக்குச் சமயப் பணியில் இருந்த ஈடுபாட்டின் காரணமாகவும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அரச பணியில் அவர் இளைப்பாறினாலும் கூட அவரது சுகாதார, மருத்துவ, சமய,சமூகப் பணிகள் நிச்சயமாகத் தொடருமென நம்புகின்றேன். அவரது பணிகள் தொடர இன்னும் நீண்டகாலம் நலமுடன் வாழ இறைவன் அருள் புரிய வேண்டி எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிறைவுசெய்கின்றேன்.

தி.ஆ.சிவசுவாமி
மேலதிக அரச அதிபர், யாழ்ப்பாணம்.

## தளரா மனவுறுதியுடன் செயற்பட்டவர்



மகத்தான, உன்னதமான அரும் சேவையாற்றி தனது 73 வயதில் சேவையிலிருந்து இளைப்பாறும் வைத்திய கலாநிதி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை அவர்களை இந்நேரத்தில் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

மிக நீண்டகாலம் வைத்தியத்துறைக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்து பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு ஓர் ஒளி விளக்காக எந்நேரமும் இருந்து தன்னலமற்ற சேவையாற்றிய பெருமகன் எங்கள் டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை அவர்கள்.

தன்னுடைய வயதையும் பாராமல் எங்கும் எந்நேரத்திலும் சென்று வருவார். துடிப்புடன் இயங்குவார். எந்நேரமும் நகைச்சுவை கலந்த இனியபேச்சு அவரிடமிருக்கும். எத்தனை சோதனைகள், கஷ்டங்கள் வந்தாலும் அவையெல்லாம் தனக்கு துச்சமெனக் கருதி அஞ்சாநெஞ்சுடன் தளரா மன உறுதியுடன் செயலாற்றிய வீரர்.

இருவருடைய ஓய்வுக்காலம் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக அமைய எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

இ.வரதீஸ்வரன்
பிரதேச செயலர், பருத்தித்துறை.

## எவராலும் மறக்க இயலாத சேவையாளன்



வடமராட்சியில் ஓர் ஆதார வைத்தியசாலை. அதற்கு மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை.தானே என்ற நிலை மக்கள் மத்தியில் பல வருடங்களாக இருந்து வந்தது.

இவருக்குப் பிரியாவிடை கிடைக்கின்றது என்ற செய்தி அம்மக்கள் மத்தியில் ஆச்சரியத்தையும் கவலையையும் ஏற்படுத்துவது இயற்கையே.

வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை இல்லாத ஆதார வைத்தியசாலையைச் சிந்திப்பது சிரமமாகவே உள்ளது. அவருடைய சேவையை எவராலும் மறக்க முடியாது. மாவட்ட வைத்திய அதிகாரி என்ற நிலையிலிருந்து கொண்டு தனது உடல்நிலை சாதகமாக இல்லாதபோதும் அவரால் ஆற்றப்பட்ட அன்பான சேவையைப் பலரும் நினைவு கூருவார்கள் என்பது நிச்சயம்.

அவரது அளப்பரிய சேவைக்கு வடமராட்சியைச் சேர்ந்தவன் என்ற ரீதியிலும் மருதங்கேணிப் பிரிவுக்கு உதவி அரசாங்க அதிபர் என்ற ரீதியிலும் மக்கள் சார்பிலும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் நிறைவடைகின்றேன். அவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சியானதாக, ஆரோக்கியமானதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வே. வீரபத்திரப்பிள்ளை
உதவி அரச அதிபர், வடமராட்சி கிழக்கு.

## எளிமையே உருவான கர்மயோகி



மக்கள் தொண்டனாக அதிஉச்ச சேவை புரிந்த வைத்திய கலாநிதி சின்னத்துரை கதிரவேற்பிள்ளை அவர்கள் தற்போது அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்றார்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைப் பணியே தமது வாழ்க்கையாகக் கொண்டு வாழ்ந்த ... பெருமைகளை எமது சமூகம் என்றும் நன்றி பாராட்டும். அகவை எழுபதைத் தாண்டிய முதிர்ந்த அனுபவத்தோடு ஓர் இளைஞனுக்குரிய சுறுசுறுப்புடனும் அகங்கார மமகாரமற்ற வெள்ளை உள்ளத்துடனும் ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி எல்லோரும் எளிதில் அணுகக் கூடிய விதமாக எளிமையே உருவாகத் திகழும் கர்மயோகி அவர். அன்னார் 'எல்லோரையும் நேசித்து எல்லோருக்கும் சேவை செய்தல்' எனும் பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் போதனைக்கு அமைய வாழும் உத்தமர் ஆவார்.

வைத்தியகலாநிதி சின்னத்துரை கதிரவேற்பிள்ளை அவர்களின் ஆதரவுடன் வடமராட்சி ஸ்ரீ சத்தியசாயி சேவா அன்பர்கள் மந்திகை ஆதார வைத்தியசாலையில் மேற்கொண்ட சைவப் பணிகள் அனேகம்.

ஆள்பற்றாக்குறை நிலவிய நாள்களில் மேற்கொண்ட சுகாதார துப்புரவுப் பணிகள் முதலிய சாயி தொண்டர்களின் சேவை நடவடிக்கைகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் வழங்கியவர்.

வைத்திய கலாநிதி சின்னத்துரை கதிரவேற்பிள்ளை அவர்கள் நீடூழி காலம் வாழ்ந்து மேலும் பல நற்பணிகளை ஆற்ற இறையருளை வேண்டி அமைகின்றேன்.

வே.சேனாதிராச
முன்னாள் தலைவர்,
வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலையங்களின் இணைப்புக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க! இளஞானச் சுடர்கள்

அண்மையில் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் யா/ மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த 14 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டி வாழ்த்துகின்றனர்.

சித்திபெற்ற மாணவர்களும் அவர்கள் பெற்ற புள்ளிகளும்

| | |
|---|---|
| 01. சிதம்பரநாடேசன் குமரேசன் | - 158 |
| 02. கனகசபை மகிந்தன் | - 157 |
| 03. ரவிச்சந்திரன் ராமகிருஷ்ணன் | - 152 |
| 04. இராஜேந்திரன் கோகிலன் | - 152 |
| 05. ஜெயரஞ்சிதன் யதுர்சன் | - 147 |
| 06. அருண்ஜா ஜெயபாலன் | - 146 |
| 07. கோகிலவதனா ராதாகிருஸ்ணன் | - 145 |
| 08. தங்கராசா திசாந்தன் | - 142 |
| 09. கிருஷா நித்தியராஜா | - 142 |
| 10. தேவராசா தவக்குமார் | - 139 |
| 11. நாகேந்திரராஜா நிமல்ராஜ் | - 137 |
| 12. ஷழிலினி சபாநாயகம் | - 137 |
| 13. சஞ்சிகா லோகேஸ்வரராசா | - 135 |
| 14. கிருபாகரன் ஹரிராம் | - 134 |

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி-51681)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



செல்வி கீர்த்தனா மதிவண்ணன் (157 புள்ளிகள்) (யா/ நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை)

5ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது பேர்த்தி செல்வி கீர்த்தனா மதிவண்ணன் அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம். அவர் எதிர்காலத்தில் மேலும் சிறப்புடன் பல்கலையும் பெற்று சிறப்புடன் வாழ்க வாழ்க என இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

கந்தசாமிக் குருக்கள் - பார்வதி தம்பதிகளும், குடும்பத்தினரும்.

(சி-51666)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



2006ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 24ஆவது இடத்தையும் தெல்லிப்பழை கோட்ட மட்டத்தில் முதலிடத்தையும் பெற்ற அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் கல்வி கற்ற செல்வி கிருபாகரன் - விஷ்ணுகாவை பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துவதோடு இவருக்கு கல்வி புகட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கருகப்புலம், அளவெட்டி. குடும்பத்தினர்.

### அழைப்புக் கட்டளை

இல. 16 பிரிவு 55(1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்துள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

மரியநாள் இராஜேஸ்வரிமலர்
19/41. கடற்கரை வீதி ஈச்சமோட்டை
யாழ்ப்பாணம்.
வழக்காளி
எதிர்

வழக்கு இல. 748
விடயம் : மணநீக்கம்

அந்தோனி மரியநாள்
இளவாலை பேர்த்து. இளவாலை
தற்போதைய முகவரி தெரியாது
எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி மணநீக்கம் கோரி
இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்கு தொடர்ந்தள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2007 ஆம் ஆண்டு தை (01) மாதம் 09ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுசாட்சிக் காரரில் லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறிமோகன்
பதிவாளர்

குறிப்பு: விளக்கத்தேதியை நிர்ணயிப்பதாக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குகத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறு 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத் தப்படுகின்றீர்.

2006ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22ஆம் திகதி

கையொப்பம், பதிவாளர்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் இராசம்மா



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராசம்மா அவர்கள் 26.12.2006 அன்று கிளிநொச்சியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.12.2006 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இந்திராணி (மகள்),
மகேந்திரன் (மருமகன்)
பேரப்பிள்ளைகள்.

35/8. இராசேஸ்வரி வீதி
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (65200)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



வசாவிளான் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி

**தயாபரன் நிவேந்தனா**

(தாமரா)

136 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்கு பெற்றோர்கள், மாமன்மார்கள் வாழ்த்துகின்றனர்.

பெற்றோர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



புங்குடுதீவு , 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகராசா (யா/ ஊர்காவற் றுறை, மெலிஞ்சிமுனை றோ.க.த.க. வித்தியாலய அதிபர்) - விமலாதேவி தம்பதியரின்

செல்வப் புதல்வி **விந்துஜா**

(யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்) 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அப்பப்பா - அப்பம்மா,
அத்தை - நா.கேதீஸ்வரி (ஆசிரியை),
(யா/ புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகா வித்தியாலயம்)

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் ஹமிடல் லேனில் மிகவும் நவீன முறையில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் விற்பனைக்குண்டு. Air Condition இணைப்புகளும் உயர்தர Architect இனால் கட்டப்பட்ட 02 Bed Room, 03 Bed Room வீடுகள் உள்ளன. உடனே குடி புகலாம். விலை 50 இலட்சத்திலிருந்து.

தொடர்புகளுக்கு:
0777 271222.

## Organ\Violin Notes

Organ, Guitar, வயலின், வீணை, புல்லாங்குழல், மெலோடிக்கா போன்ற இசைக் கருவிகளுக்கான 250 சினிமாப் பாடல்களின் இசைக் குறிப்புகள் விற்பனைக்குண்டு. வருடப்பிறப்பை முன்னிட்டு ஒரு வாரத்திற்கு மட்டும் விசேட சலுகைகள் உண்டு. புதிய Organ வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஆரம்பமாகும்.

**சுரவீணா இசை மன்றம்**
131, கோயில் வீதி, நல்லூர்.
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே)

## சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது.
உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

### ஐ. ஆறுமுகம்

(இளைப்பாறிய ஓவசியர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.08.1918 | 01.12.2006 |

01.12.2006 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திய எம் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர், நண்பர்கள், ஏனையோர்க்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் பல வழிகளில் உதவி புரிந்து எம் துயரில் பங்குகொண்ட அனைவர்க்கும் எமது நன்றிகளை நவில்கின்றோம்.

இன்று 30.12.2006 காலை 6 மணிக்கு முகத்துவாரத்தில் அஸ்தி சங்கமமும் நாளை 31.12.2006 அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரணமும் தொடர்ந்து மதியபோசனமும் இடம் பெறும். அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
12.12.1933
ஆண்டவன் அடியில்
22.12.2004

### அமரர் செல்லப்பா செல்லத்துரை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: 30.12.2006

அன்பு வழியில் ஆண்டவன் அருள்நாடி
அறநெறியில் நின்ற அன்புத் தெய்வமே!
பேரன்பு கொண்டு பேணியெமைக் காத்தீர்கள்
ஆற்றுவார் இன்றி அழுது நிற்கின்றோம்
ஆன்மீக நெறியில் வாழ்ந்த வாழ்வு
நெஞ்சிலே நின்று நித்தமும் வழிகாட்டும்.

சிறுப்பிட்டி வடக்கு, சிறுப்பிட்டி. நினைவுகளால் நெஞ்சுருகும் குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### இரங்கநாதன் பிரபாசங்கர் (குஞ்சுபாபி)

திதி: கார்த்திகை வளர்பிறைத் தசமி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16.03.1967 | 30.11.2006 |

கடந்த 30.11.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இரங்கநாதன் பிரபாசங்கர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.12.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடரும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் சுகவீனமுற்றிருந்தவேளை பல்வேறு சேவைகளையும் உதவிகளையும் புரிந்த மனித நேயங்களுக்கும் கருணையுள்ளம் மிக்க அரச அதிபர், அதிகாரிகள், மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் சகலருக்கும் -

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைத் தொடர்பு கொண்டும் எம்முடன் துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியை நிகழ்வுகளில் பங்கு பற்றி எம்மை ஆற்றியவர்களுக்கும் மற்றும் இதரபல உதவிகள் புரிந்த நல்லிதயங்கள் அனைவருக்கும் நாம் என்றும் நன்றியுடையோம்.

உசன், மிருசுவில். - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 . 01 . 1926 | 30 . 11 . 2006 |

மாப்பாண வளவு, குடியிருப்பு, வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட

### அமரர் கணபதிப்பிள்ளை குமாரசேகரம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - மின்சார சபை)

உண்மையாய் உயிரா யதனூடுருவி ஊற்றாயென்னும்
உற்றதாம் உணர்வா யுள்ளே யூட்டிய அன்பின்
எனமையா மூச்சா யுதிரமா யோடி நித்தம்
எம்மனக் களிப்பே செல்வம் எனக்கண்ட கோனே
வண்ணமாய் வாழ்வில் துன்பம் அறிந்திடா தூட்டி நின்று
வளமது வகுத்துவான் போல் வாசனை தூவி நின்றீர்
மண்ணிலே கண்ட தெய்வம் மாசறுமுத்து நீரே
மலர்ப்பதம் கண்ணீர் சொரிந்து நினைப்பினை விடுவோமல்லோம்.

கடந்த 30.11.2006 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும், தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில். மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பூவுலகில் | சுவர்க்கத்தில் |
|---|---|
| 01 . 07 . 1943 | 10 . 01 . 2006 |

திதி: வைகுண்ட சுவர்க்க வாயில் ஏகாதசி 30.12.2006

### திருமதி சரோஜினிதேவி சிவனடியான்

(இளைப்பாறிய ஆசிரியை, யா/ வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்)

அன்பு காட்டிய எங்கள் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆகுதம்மா!
உங்கள் பிள்ளைகள் கல்வி மான்களாக
வரவேண்டும் என்ற கனவு நனவாகி விட்டதம்மா
பட்டம், பதவிபெற்று பார்புகழ நாம் வாழ
பாசமுடன் வளர்த்த அம்மா நீங்கள்
பார்ப்பதற்கு இன்று அருகிலில்லையே!
பாசமுள்ள கணவர், அன்புமிக்க பிள்ளைகள்
பாசமிகு சகோதரர்கள், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏங்கி நிற்க நீர் வைகுண்ட சுவர்க்கவாயில்
ஏகாதசி விரத நன்நாளில் சுவர்க்கம் சென்றமை
நீர் கடைப்பிடித்து வந்த விரதங்களின் பயன் தாயே!
ஓராண்டு என்ன? எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எமைவிட்டு என்றென்றும் நீங்காது உம் நினைவு
உமது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல எம்
குலதெய்வம் பெருங்குளம் முத்துமாரி அம்மனை வேண்டிப்
பிரார்த்திக்கின்றோம் தாயே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

"பொற்றாமரை"
2ஆம் வட்டாரம், வேலணை.
தொலைபேசி: 060 2212845, 077 6147633

உமது பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# அனல் மின்சார நிலையம் எங்கே?

திருகோணலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில், அறுபது அல்லது எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் பூர்வீக தமிழர் பிரதேசங்களாக இருந்த பல நிலப்பரப்புகள் இப்போது அவ்வாறு இல்லை!

இலங்கை பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்ற கையோடு, தமிழர் பிரதேசங்களை, திட்டமிட்ட அரச உதவியுடனான குடியேற்றத் திட்டங்கள் மூலம் சிங்களப் பிரதேசங்கள் ஆக்குவதற்கான 'சுதந்திரமும்' கொழும்பு அரசுகளுக்கு கைவரப்பெற்றன.

நாட்டின் அபிவிருத்தி என்ற முகப்புடன், அரச ஆதரவுடனான குடியேற்றத் திட்டங்களைக் கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் பிரதேசங்களில் - பெரும் பகுதிகள் சிங்களப் பிரதேசங்களாக மாற்றப்பட்டன. அம்பாறை என்ற புதிய மாவட்டம் ஒன்றைத் தோற்றுவிக்கும் அளவுக்கு அசுர வேகத்தில் இந்தக் கபளீகரம் நடத்தப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு குடியேற்றக் கபளீகரமே மூலவிதை. அதிலிருந்து முளைவிட்டு, கன்றாகி, மரமாகி எண்ணற்ற இனவாதக் கிளைகள் பரப்பி நச்சு விருட்சமாகி அது நிற்பதைக் காண்கிறோம்.

மழைவிட்டும் தூவானம் விடுவதில்லை என்ற வாசகத்துக்கு ஏற்ப, தமிழர் பிரதேசங்களை பெரும்பான்மை சமூகத்தினரின் வாழ்விடங்களாக மாற்றும் நயவஞ்சகத் திட்டங்கள் இன்னமும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தின் தெற்குப் பிரதேசத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்தினது வடக்குப் பிரதேசத்திலும், மிக அண்மைக் காலமாக, மிகக் குறிப்பாக மஹிந்த அரசு பதவிக்கு வந்த பின்னர், தமிழர்களை அவர்களின் சொந்த வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றும் உள்நோக்கத்துடன் துரித வேகத்தில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த இரண்டு பிரதேசங்களிலும் உள்ள 30 கிராமங்களில் இருந்து 30, 000 தமிழ் மக்கள் இராணுவ நடவடிக்கைகள் மூலம் வெளியேற்றப்பட்டதாக திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரத்திரசிங்கம் அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தார்.

தமிழர்கள், தமது பூர்வீக வாழ்விடங்களில் இருந்து இராணுவ நடவடிக்கை மூலம் அகதிகளாக்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்ட கிராமங்களில், சம்பூர் நெய்தல் நிலமும் ஒன்று. இந்த விரட்டியடிப்பு தற்காலிகமானது அல்ல. அந்தப் பிரதேசத்தை முற்றாகவே மக்கள் வாழ்வதற்கு உகந்த பிரதேசமற்றதாக்கி நிர்மூலமாக்கிவிடும் உள்நோக்கத்துடனேயே நடத்தப்பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் இப்போது வலுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி பதவியில் இருந்த காலத்தில் - 2002இல் - இந்திய உதவியுடன் அனல் மின்சார நிலையம் ஒன்றை சீனக்குடாவில் அமைப்பதற்கு முடிவாகி இருந்தது. இந்திய தேசிய அனல்மின்சாரக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் நடத்திய சாதக பாதக நிலை ஆய்வுகளின் பின்னரே அந்த முடிவு எடுக்கப்பட்டது.

சீனக்குடாவுக்கு தென்மேற்கே உள்ள கந்தளாய்ப் பிரதேசத்தில் அது பெரும் சுற்றுச்சூழல் பதிப்புகளை உண்டாக்கும் என்று பெரும்பான்மையின மக்களால் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் தமிழர்களின் நிலப்பரப்புத் தானே, என்ன கேடு கெட்டால் என்ன, என்ற கரவோடு சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைக்க இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் அனல் மின்சார நிலையத்தை அமைப்பதற்கான கூட்டு ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில், அவரது முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்திய அரசின் சார்பில் இந்திய தேசிய அனல் மின்சக்திக் கூட்டுத்தாபனத்தின் முக்கியஸ்தர் ரி.சங்கரலிங்கமும், இலங்கை அரசின் சார்பில் மின்சாரசபையின் தலைவர் பெரேராவும் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் இந்தியத் தூதுவர் அசோக் பிரசாத்தும், மின்சக்தி அமைச்சர் ஜோன் செனிவிரத்னாவும் பிரசன்னமாகி இருந்தனர்.

ஆனால், மின்சக்தி நிலையத்தின் அமைவிடம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை. அநேகமாக அனல் மின் நிலையம் சம்பூரிலேயே நிறுவப்படும் என்று சொல்லப்படுகின்றது.

சம்பூரில் அனல் மின்நிலையத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் அவசர அவசரமாக நடவடிக்கை எடுத்துவருவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

அவர்களுடன் எந்தவிதமான கலந்தாலோசனையும் செய்யாமல், ஒரு தரப்பு நடவடிக்கையாக அரசாங்கம் இந்த விடயத்தில் நடந்துகொண்டுள்ளது.

தமிழர்களுக்கு எதிரான இவ்விடயத்தில் தமிழ் எம்.பிக்களுடன் ஆலோசனை எதற்கு என்ற தீவிராதப்போக்கை அரசு கடைப்பிடிக்கிறது.

பதினொராயிரம் தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசம் சம்பூர். அப்பகுதி மக்களைத் திட்டமிட்டு விரட்டிவிட்டு, அந்த இடத்தை அரசு ஆக்கிரமித்துள்ளது.

விரட்டப்பட்ட மக்கள் இப்போது அகதி முகாம்களில் சீரழிந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் தமது சொந்த - பூர்வீக - கிராமத்துக்குச் சென்று மீளக்குடியேறாதவாறு அரசு மிகப்பாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

அந்த உள்நோக்கத்துடனேயே அங்கு அனல் மின்சார நிலையத்தை நிறுவுவதற்காக அவசர அவசரமாகக் காரியமாற்றுகிறது - என்று திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனல் மின்நிலையம் நிறுவப்படவுள்ள சம்பூரின் கடல் வளம், நிலவளம் ஆகியன இரண்டும் மிகப் பாரதூரமான அளவில் பாதிப்புறும்.

மின்நிலையத்தில் இருந்து வெளியேறும் நுண்துகள்களால் கடலும், கடற்கரையும் மாசுறும்.

அதில் இருந்து வெளியேறும் பாதரசம் (மேர்க்குரி) என்ற நச்சுப்பொருள் பரவிப் பரந்து மக்கள் உடல்நலத்தை உறிஞ்சிப் பல பாதிப்புகளை உண்டாக்கும்.

100 மெகாவாட் அளவான மின்சாரத்தை உற்பத்திசெய்யும்போது, 10 லட்சம் தொன் கரியமிலவாயு பிறக்கும்.

இத்தனை பாதகமான அம்சங்களையும் பொருட்படுத்தாமல், அனல் மின் நிலையம் நிறுவுவதற்கு இந்தியாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்தாக இருக்கிறது.

புத்தளம் நுரைச்சோலையில் அனல் மின்சார நிலையம் ஒன்றினை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டது. அந்தப் பிரதேச மக்கள் தொடர்ந்து காட்டிவரும் எதிர்ப்பைத் தொடர்ந்து சுமார் இரண்டு வருடங்களாக அதில் கை தொடாமல் இருக்கிறது அரசு. இப்போதும் கூட அங்கு வாழும் மூவின மக்களும் சேர்ந்து ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு ஊர்வலங்களும் நடத்தி வருகின்றனர்.

அனல் மின்நிலையம் நிறுவப்பட்டால் அது அமையும் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பல வகையான பாதிப்புகள் உண்டாகி, அவர்களுக்கு மிகக் குந்தகமான எதிர்கால விளைவுகளைத்தோற்றுவிக்கும் என்பது நிறுவப்பட்ட கருத்து.

அதனால், தனித்தமிழர் பிரதேசமான சம்பூரில் அனல் மின்சார நிலையத்தை நிர்மாணித்து அதனை மக்கள் வாழ்வதற்கு உதவாத பிரதேசமாக்குவதற்கு அரசு கங்கணம் கட்டி நிற்கிறது - இனி யாரால் என்ன செய்யமுடியும் என்ற அதிகார அகந்தையுடன்!

# சாதாரண பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணி இம்முறை இங்கில்லை

## ஏனைய இடங்களில் நேற்று ஆரம்பம்

அச்சுவேலி,டிசெ.30

கடந்த 12ஆம் திகதிமுதல் நடைபெற்ற ஜீ.சி.ஈ. (சாதாரண) தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணி இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாது.

விடைத்தாள் மதிப்பிடும் பணி நேற்று நாடுமுழுவதும் ஆரம்பமாகின. இந்த மதிப்பிடும் பணி யாழ்ப்பாணத்திலும், வடமராட்சியிலும் இரு நிலையங்களில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இரு நிலையங்களிலும் நேற்று அந்தப் பணிகள் ஆரம்பமாகவில்லை.

விடைத்தாள்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவந்து, மீளக் கொழும்புக்கு கொண்டுசெல்வதில் ஏற்பட்டுள்ள சிக்கலே இப்பணிகள் இடம்பெறாமைக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.(1-11)

# அஜித் சமரநாயக்க நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.30

பிரபல ஊடகவியலாளரும் 'இறுதியாக 'டெய்லிநியூஸ்' பத்திரிகையில் ஆசிரியராக கடமையாற்றியவருமான அஜித் சமரநாயக்கா பத்திரிகைத் துறைக்கு ஆற்றிய சேவையை நினைவு கூரும் நிகழ்ச்சி இன்று பி.ப. 3மணிக்கு அகவிளி நிலையத்தில் நடைபெறும்.

அகில இலங்கை மார்க்சிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வு வங்கி ஊழியர்களின் சங்கத்தலைவர் எஸ். சிவபாலன் தலைமையில் நடைபெறும்.

நினைவுரைகள், சேவை நயப்புரைகள் இடம்பெறும். (1-88)

# பொலீஸ் நிலையத்தில் இன்று பொருள் விற்பனை

யாழ். பொலீஸ் நிலையத்தில் இன்று காலை 9 மணிமுதல் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

அரிசி, மா, பால்மா வகைகள், தேங்காய் எண்ணெய் போன்ற பொருள்கள் விற்பனை செய்யப்படும் என பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (1)

# சகல பாதைகளிலும் கடைசிபஸ் 5 மணிக்கு

## திங்கள் முதல் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாட்டில் இலங்கை போக்குவரத்துச் சபை ஜனவரி முதலாம் திகதி முதல் மாலை 5 மணிக்கு சகல பாதைகளுக்குமான கடைசி பஸ் சேவையை நடத்தவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் (வடக்கு) செயலாற்று முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் இதுவரை காலமும் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாகவும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரம் குறைவாக இருந்தமையாலும் 4.30 மணிக்கே சகல பாதைகளுக்குமான கடைசி பஸ் சேவைகள் நடத்தப்பட்டுவந்தன.

தற்போது நிலைமை ஓரளவு சீரடைந்துள்ளமையால் 5 மணிக்கு இறுதி பஸ் சேவையை நடத்தத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(1-203)

# சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம் இன்று சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து காலை 8.30 மணிக்கு அபிசேகமும் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று முற்பகல் 11 மணிக்கு சுவாமி தேரேறி வலம் வருவார்.

மாலை 6 மணிக்கு சாயங்காலப் பூசையும் நள்ளிரவு அர்த்தசாப் பூசையும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் 4 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் இடம்பெற்று அதிகாலை 5 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.30

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வைகுண்ட ஏகாதசி உற்சவம் இன்று சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து காலை 6 மணிக்கு சொர்க்கவாசல் தரிசனம் இடம்பெறவுள்ளது.

இரவு வைகுண்ட ஏகதசி புராணபடனமும் பஜனையும் இடம்பெறவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.30

வண்ணை வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலய சுவர்க்கவாயில் ஏகாதசி தரிசனம் இன்று சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதிகாலை 3.30 மணிமுதல் சுப்பிரபாதம், திருப்பள்ளியெழுச்சி, மூலவுர் அபிசேகம், திருவனந்தல் பூசை, திருப்பாவை ஓதல், உதயபூசை என்பன இடம்பெற்று 6 மணிக்கு சொர்க்கவாயில் தரிசனம் இடம்பெறும்.

தொடந்து காலை 9 மணிக்கு மூலவர் அபிசேகம், 10.15 மணிக்கு காலைச் சாந்திப் பூசை, 10.45 மணிக்கு ஆதி வெங்கடேசர் திருவீதியுலா என்பன இடம்பெறும்.

மாலை 3.45 மணிக்கு சாயரட்சை பூசையும் 4 மணிக்கு இரண்டாம் காலப் பூசையும் 4.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் இடம்பெற்று சுவாமி திருவீதியுலா வலம் வருதல் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை துவாதசி உற்சவம் இடம்பெறவுள்ளது. (1-203)

# சபரிமலை பக்தர்களுக்கு இன்று பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாட்டில் இருந்து சபரிமலைக்கான யாத்திரையை மேற்கொள்ளவிருக்கும் பக்தர்களை பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை அமைச்சு அலுவலகத்துக்கு வருமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு கேட்டுள்ளது.

பக்தர்கள் தமது பயண ஏற்பாடுகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டுவந்தனர் என்றும் -

அமைச்சர் எடுத்த நடவடிக்கையின் பயனாக கப்பல்மூலம் கொழும்பு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

பயணம் செய்யவிருக்கும் பக்தர்கள் இன்று காலை 8 மணிக்கு அமைச்சு அலுவலகத்துக்கு வருமாறும் - அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

# வெளிவாரிப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.30

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகினால் நடத்தப்பட்ட கலைமாணி பகுதி II 2002 பரீட்சை முடிவுகள் கடந்த வியாழக்கிழமை வெளியாகின.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பெறுபேற்றுச் சான்றிதழை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் வெளிவாரிப் பிரிவில் நேரடியாக சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளிவாரிப் பிரிவின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். (1)

# வெருகல் முருகன் ஆலயம் மீதான தாக்குதலை கண்டித்து ஜனாதிபதிக்கு இந்துமாமன்றம் கடிதம்

கொழும்பு,டிசெ.30

திருமலை மாவட்டத்தில் வெருகல் முருகன் ஆலயம் மீது விமானப்படை குண்டுவீச்சு நடத்தியுள்ளதை கண்டிக்கின்றோம். இதற்குப் பொறுப்பானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியை அகில இலங்கை இந்துமாமன்றம் கோரியுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்து ஆலயம் தாக்கப்பட்டமை குறித்து பத்திரிகை ஒன்றில் வெளிவந்திருக்கும் செய்தி இந்து மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பற்றில் வெருகல் முருகன் கோயில் மீது இலங்கை விமானப்படை வியாழன் காலை குண்டுவீச்சு நடத்தியிருக்கிறது. கோயில் கட்டடங்கள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன.

இந்து மக்களுக்கு வேதனை தரும் இத் துர்ப்பாக்கிய நிகழ்வை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அந்தப் பிரதேசத்தில் நமது மக்கள் ஏற்கனவே துயரில் வாழ்கிறார்கள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று அவர்களின் உணர்வுகளை மேலும் வருத்தும் நிகழ்வு இது.

இத்தாக்குதலுக்கு தங்களின் அங்கீகாரம் என்றும் இருந்திருக்கமாட்டாது; அதனை ஏற்று அங்கீகரிக்கவும் மாட்டீர்கள் எனவும் நம்புகிறோம்.

இதற்குப் பொறுப்பானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும், அரச செலவில் ஆலயத்தை மீண்டும் கட்டிப் புனருத்தாரணம் செய்ய ஒழுங்கு செய்யுமாறும் தங்களை இந்நாட்டு இந்து மக்கள் சார்பாக வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

# 4 லீற்றர் மண்எண்ணெய் நேற்றுமுதல் விநியோகம்

அரியாலை,டிசெ.30

முற்றவெளியில் உள்ள யாழ். ப. நோ. கூ.சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுதல் சங்கத்தின் பங்கீட்டு அட்டைகளுக்கு நான்கு லீற்றர் மண்எண்ணெய் வீதம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த மாதத்திற்கான இரண்டாம் கட்ட விநியோகமாகவே இது இடம்பெற்றுவருகின்றது.

இதன்படி ஏற்கனவே இரண்டு லீற்றர் மண்எண்ணெய் பெற்றவர்களுக்கு மேலும் இரண்டு லீற்றர் மண்எண்ணெய் விநியோம் செய்யப்பட்டு வருகிறது. (ப-203-17)

# நாளை

*மார்கழி 16*
*ஞாயிற்றுக்கிழமை*
*31.12.2006*
*திதி : துவாதசி*
*முற்பகல் 11.28*
*நட்சத்திரம் : கார்த்திகை*
*முன்னிரவு 11.44*
*சுபநேரம் : 09.29 - 10.59*
*ராகுகாலம் : 04.59 - 06.29*

# சுயதொழில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ.30

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கணவரை இழந்த, கணவரால் கைவிடப்பட்ட, 40 வயதிற்கு உட்பட்ட, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்ற இளம் பெண்களின் சுயதொழில் முயற்சிகளுக்கான உதவித் தொகைகளை வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கரவெட்டி, பருத்தித்துறை, வேலணை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பெண்களுக்கு இன்று சனிக்கிழமை முதற்கட்ட உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளன என அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட கணவரை இழந்த அல்லது கணவரால் கைவிடப்பட்ட, 40 வயதிற்குட்பட்ட, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருகின்ற இளம் குடும்பப் பெண்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான முதற்கட்ட உதவித் தொகைகள் எதிர்வரும் 02 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகோவை பதவி விலக்கும் தீர்மானம் போட்டிக்குழுவால் நிறைவேற்றம்

சேலம், டிசெ. 30

ம.தி.முக. பொதுச் செயலாளர் பதவியில் இருந்து வைகோவை நீக்கும் தீர்மானத்தை போட்டி ம.தி.மு.க. நேற்று நிறைவேற்றியுள்ளது. புதிய பொதுச்செயலாளராக செஞ்சி ராமச்சந்திரனை போட்டிக்குழு நியமித்துள்ளது.

சேலத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடத்தப்பட்ட கூட்டத்தில் எல். கணேசன், செஞ்சி இராமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வைகோவை பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து நீக்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

எதிர்காலத்தில் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைப்பதில்லை என்றும் ஒரு தீர்மானம் அங்கு நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டம் குறித்து கருத்து வெளியிட்ட சேலம் மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் தாமரைக்கண்ணன், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 8 பொதுக்குழு உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. நடந்து முடித்தது பொதுக்குழுக்கூட்டம் அல்ல. இங்கு எடுக் கப்பட்ட தீர்மானம் வைகோவைக் கட்டுப்படுத்தாது - என்றார் தாமரைக் கண்ணன். (அ-1)

# ஊடகவியலாளரின் விருந்துபசாரத்தில் திடீரெனப் பங்குபற்றினார் ஜனாதிபதி

ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான வருட இறுதி விருந்துபசார நிகழ்வில் மகிந்த ராஜபக்ச திடீரென பங்குபற்றினார்.

'கிராண்ட் ஓரியன்டல்' விடுதியில் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான விருந்துபசார நிகழ்ச்சி நிரலில் மகிந்தவின் வரவு இருக்கவில்லை எனினும், எதிர்பாராத விதமாக அவர் அங்கு வருகை தந்தார்.

'சண்டே லீடர்' ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகிய பின்னர் மகிந்த விருந்துபசார நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மின்நிலையத்தின் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு முன் இரண்டு பிரதான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

ஒன்று இடப்பிரச்சினை. மற்றையது இத்திட்டத்திற்கு இலங்கையும், இந்தியாவும் வழங்கத் தீர்மானித்திருக்கும் நிதியுடன் மூன்றாம் தரப்பும் நிதி வழங்குவது தொடர்பான பிரச்சினை.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் இலங்கை அரசால் கைப்பற்றப்பட்ட - தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்த - இடமான சம்பூரிலேயே இந்த மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் இலங்கை அரசு மிகவும் குறியாயுள்ளது.

ஆனால் இந்தியா, திருகோணமலைத் துறைமுகத்திற்கருகில் அமைந்துள்ள சீனன்குடாவிலுள்ள ஓரிடத்தில் இந்த மின் நிலையத்தை அமைப்பதற்கே விரும்புகிறது என்று 'இந்துஸ்தான் ரைம்ஸ்' தெரிவிக்கிறது.

### அரசின் தீர்மானம்

மின் நிலையம் அமைப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இடம் தொடர்பான ஆய்வினையடுத்து வெளியிடப்பட்ட அறிக்கை மூன்று இடங்களை முன்மொழிந்தது.

இந்திய தேசிய அனல் மின்சக்திக் கூட்டுத்தாபனம் சீனன்குடாவிலுள்ள ஓரிடத்தையே தெரிவு செய்தது. ஆனால், இவ்வருட மத்தியில் சம்பூரை அரசு கைப்பற்றியதும் சம்பூரில் இம்மின்நிலையத்தை நிறுவ அரசு தீர்மானித்தது.

சம்பூரில் மின் நிலையத்தை நிறுவுவதற்குத் தமிழர்கள் மத்தியில் பலத்த கண்டனம் எழுந்துள்ளது.

இந்தியாவின் தேசிய நிறுவனமான தேசிய அனல் மின் சக்திக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்திற்கு 500 மில்லியன் டொலர்கள் முதலீடு செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கு இந்திய அரசு, 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவியாக வழங்கவுள்ளது. எஞ்சிய 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை மின்சாரசபையும், இந்தியாவின மற்றொரு நிறுவனமும் வழங்கவுள்ளன. இந்தத் திட்டத்திற்கான நிர்மாணப் பணிகள் 2010 ஆம் ஆண்டு நிறைவடை யும்.

கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் எரிபொருள், மின்சக்தி அமைச்சர் ஜோன் செனிவிரத்ன வும், இலங்கைக்கான இந்தியத் தூதர் அலோக் பிரசாத்தும் கலந்து கொண்டனர்.

இந்திய அரசின் சார்பில் இந்திய தேசிய அனல் மின்சக்தி கூட்டுத்தாபனத்தின் முக்கியஸ்தர்ரி.சங்கர்லிங்கமும், இலங்கை அரசின் சார்பில் இலங்கை மின்சாரசபையின் தலைவர் பெரேராவும் இவ்வெவ்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (ஐ)

## வாகரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பிரிகேடியர் பிரசாத் சமரசிங்கா தம்மிடம் கூறியதாக, 'றொய்டர்' நிறுவனத்தின் செய்தியாளர் சஞ்சீவ் மிக்லானி எழுதியுள்ளார்.

வாகரையை இராணுவம் கைப்பற்றுவது என்பது காலம் சம்பந்தப்பட்ட ஒன்றே, அந்தக் காலம் சில நாள்களாகவும் இருக்கலாம்; சில வாரங்களாகவும் இருக்கலாம் எதுவாயினும் நாங்கள் அங்கு சென்றே தீருவோம் என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்கா 'றொய்ட்டருக்கு' அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாம் வாகரைக்கு முன்னேற முயலும் போது விடுதலைப் புலிகள் மக்களை மனித கேடயமாகப் பயன்படுத்துவார்கள் என்ற அச்சம் காரணமாகவே எமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்தியுள்ளோம்.

இராணுவத்தினருக்கு ஆத்திரமூட்டும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகள் நகரப் புறங்களில் இருந்து தாக்குதல்களை நடத்துகின்றனர்.

அவர்களே தாக்குதல்களை முதலில் நடத்தினார்கள். சுமார் 30, 000 சிவிலியன்கள் அவர்களிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக காடுகளுக்கு ஊடாக வெளியேறியுள்ளனர்.

இப்போது 8,000 தொடக்கம் 10,000 பேர் வரையிலேயே அவர்களின் பிரதேசத்தில் உள்ளனர். அவர்களில் அநேகர் வயதானவர்களும், சிறுவர்களும் ஆவர்.

உணவு மற்றும் மருந்துவகைகளுக்கு அங்கு தட்டுப்பாடு நிலவுவதால் சிவிலியன்களை அதிக நாள்களுக்கு அவர்களால் தடுத்து வைத்திருக்க இயலாது.

இப்போது அங்கு தங்கியிருக்கும் மக்களை வீதிகளால் வருவதற்கு அனுமதிக்குமாறும், வீதிகளைத் திறந்து விடுவதற்கு நாம் தயார் என்று சர்வதேச சமூகத்தின் ஊடாகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மூலமும் அவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம் - என்று தெரிவித்தார்.

### முழு யுத்தம் வெடிக்கும்

இதே வேளை, வாகரையில் இராணுவத்தினர் தாக்குதல்களை ஆரம்பித்தால், முழு அளவில் யுத்தம் வெடிக்கும் என்று விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர்.

அரசாங்கப் படையினர் யுத்த வெறி பிடித்தவர்கள் என்றும் 2002 ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி நடப்பவர்கள் என்றும் புலிகள் தெரிவித்திருக்கின்றார்கள் - என்று 'றொய்ட்டர்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கடத்தப்பட்ட புளொட் உறுப்பினர்கள் நேற்று சடலங்களாக மீட்கப்பட்டனர்

கடந்த புதன்கிழமை புத்தளம் - சேனைக்குடியிருப்பில் வைத்து கடத்தப்பட்ட புளொட் உறுப்பினர்கள் இருவரும் நேற்றுக்காலை கல்ஹமுவ, சியம்பலங்கமுவ பாலத்தினருகில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

புளொட் இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளரான 'மாமா' என்றழைக்கப்படும் பாக்கியராஜா மற்றும் உறுப்பினரான ஹரிகாலன் ஆகியோரே சடலங் களாக மீட்கப்பட்டவர்களாவர்.

சடலங்களின் கைகள் மற்றும் முகம் கள் துணியால் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன எனவும் -

சடலங்களின் அருகில் வெற்றுத் தோட்டாக்கள் காணப்பட்டன எனவும் -

கல்ஹமுவ பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 27ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் புத்தளம் - சேனைக் குடியிருப்பில் அமைந்துள்ள அகதிமுகாம் ஒன்றில் வைத்து வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவர்கள் இருவரையும் கடத்திச் சென்றமை தெரிந்ததே. (12)

# இராணுவம் மீதே சந்தேகம் என்கின்றார் சித்தார்த்தன்!

கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ள புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் இருவரினதும் கொலையில் இராணுவத்தினரே சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்று தாங்கள் சந்தேகிக்கின்றனர் என அந்த அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித்திருக்கிறார்.

இதுதொடர்பாக நேற்றிரவு பி.பி. ஸிக்கு வழங்கிய செவ்வியில் இந்த சந்தேகத்தை அவர் வெளியிட்டார்.

''எமது உறுப்பினர்கள் இருவரையும் கடத்தியவர்கள் தங்களை அரச படைகளின் ஒரு பிரத்தியேக பிரிவு என்று அடையாளப்படுத்தி தங்களின் அடையாள அட்டையையும் காட்டியிருந்தனர். அதன் பிறகுதான் அவர்கள் வீட்டுக்குள் அனுமதிக்கப்பட்டார்கள்.

குறித்த வீட்டை அவர்கள் சோதித்த விதம், அங்கு நடந்துகொண்ட முறைகளைப் பார்த்தபோது, அவர்கள் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தான் என்றே அங்கிருந்தவர்களும் கூறுகின்றார்கள்.

எனவே, நாங்களும் அவர்கள் மீது தான் சந்தேகப்படுகின்றோம்'' என்றார் சித்தார்த்தன். இருவரும் கடத்தப்பட்டவுடன் அது தொடர்பாக உடனடியாகவே ஜனாதிபதியிடமும், பொலிஸ்மா அதிபரிடமும், இராணுவ மேலதிகாரிகளிடமும் அறிவித்திருந்தேன். அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தனர் என்றும் சித்தார்த்தன் சொன்னார். (த-12)

## கைத்தொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வனவு செய்வதிலும் கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் மும்முரமாக ஈடுபட்டனர். சில மாதங்களாக மூடப்பட்டிருந்த கைத்தொலைபேசி பழுதுபார்க்கும் நிலையங்களும் தற்போது மீண்டும் திறக்கப்பட்டன.

ஆயினும், நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்குப் பின்னர் கைத்தொலைபேசி சேவை மீண்டும் செயலிழந்தது. 'டயலொக்' நிறுவனத்தின் தொலைத் தொடர்பு வலையமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே சேவை நிறுத்தப்பட்டதாக அந்த நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவையுடன் தொடர்புகொண்ட போது தெரிவிக்கப்பட்டது. கோளாறு சீர்செய்யப்பட்டதன் பின் நேற்று மாலை சேவை வழமைக்குத் திரும்பியது. (1-8)

## திருமலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்ப நேர்ந்ததாக அறியப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும் நடவடிக்கைகள் காரணமாக தமது பணிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் பேச்சாளர் டோறிஸ் எஜேரி தெரிவித்ததாவது:-

''போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நாம் விரைவில் கொழும்பு நகரில் ஒன்று கூடவிருக்கின்றோம். ஏற்கனவே எமது குழு வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கென பொதுவான பணிகளை மேற்கொண்டு வந்தது இருந்தபோதிலும் வடக்கு - கிழக்கு மாகாணப் பிரிப்பின் பின்னர் எமது செயற்பாடுகளை மேற்கொள்வதில் பெரும் சிக்கல் தோன்றியுள்ளது. இந்நிலையில் திருகோணமலை நகரில் பணியாற்றி வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் கொழும்பு நகருக்கு திரும்பியிருக்கின்றனர்'' - என்றார்.

இதேவேளை கிளிநொச்சி நகரிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று கொழும்புக்கு திரும்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். (ஐ)

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளபதி களமுனைத் தளபதிகளுக்குஅறிவுறுத்தினார்.

இச்சந்திப்பில் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் பிரசன்னமாகி இருந்தார்.

இதன்பின் இராணுவத் தளபதி துறைமுக மற்றும் விமானத்துறை பிரதி அமைச்சர் துமிந்த திஸநாயக்கவுடன் பேச்சுகளை நடத்தினார். (அ-1)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு கடந்தமாதம் எனக்கு அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பை ஏற்று அங்கு செல்வதற்காக அனுமதிகோரி கனடா தூதரகத்துக்கு விண்ணப்பித்தேன். ஆன்ால், எனக்கு அனுமதி வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது உறவுகள் எம்மைப் பிரிந்து பாதுகாப்புக்காக அங்கு வாழ்கிறார்கள். அந்த மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் அங்கு செல்ல எமக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதை சர்வதேச மனித உரிமை மீறலாகவே பார்க்கிறோம் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் தெரிவித்தார். (அ-1)

## அனல் மின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. 'தேசிய வளங்கள் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு இதை ஏற்பாடு செய்திருந்தது. பெருந்திரளான மூவின மக்களும், மூவின மதத் தலைவர்களும் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பைத்தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தமது உயிருக்கு அச்சுறுத்தலாக விளங்கும் இந்த அனல் மின் திட்டத்தை அரசு உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்றும் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் தலைவர்கள் இதில் தலையிட்டு இத்திட்டத்தைத்தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கூறினர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டதோடு இத்திட்டத்திற்கு எதிரான வாசகங்கள் அடங்கிய சுலோகங்களையும் ஏந்தியிருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தையடுத்து இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மும்மதத் தலைவர்களும் இது குறித்து ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றைக் கையளிப்பதெனத் தீர்மானித்தனர். (ஐ)

A/L CHEMISTRY
(2008 Batch)
அசேதன இரசாயனம்
By: E.RANJAN
ஆரம்பம்
30.12.2006
Sat 3 p.m.
ஐடியல் அக்கடமி
67/5, கல்லூரி வீதி
நீராவியடி, யாழ்

**பத்திரிகை விநியோகிப்போர் தேவை**

கொழும்பில் வெளியாகும் 'சுடர்ஒளி' பத்திரிகை விநியோகம் செய்வதற்கு தகுதியானவர்கள் நேரில் வரவும். மோட்டார் சைக்கிள்/ மோட்டார் செலுத்துவதற்கான லைசன்ஸ் பெற்றிருத்தல் அவசியம்.

கல்வி மற்றும் சாரதி அனுபவச் சான்றிதழ்களை எடுத்து வரவும்.ஏற்கனவே பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உயர்தர வகுப்பிற்கான கணக்கீட்டின் புதிய நூல்
() எல்லைக் கிரயவியல்
() முதலீட்டுத் தீர்மானம்
By: S.S.சிவதாஸ்
விற்பனை இடங்கள்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஸ்ரீ லங்கா புத்தகசாலை.
AEI Accounting & Economics Institute
Eco. - S.S. சிறி
Acc. - S.S. சிவதாஸ்
2009 A/L ஆரம்பம்

**மரண அறிவித்தல்**

**செல்லத்தம்பி பாக்கியதேவி**

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லத்தம்பி பாக்கியதேவி நேற்று (29.12.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பியின் மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (ஆசிரியர்) மகளும் முருகேசு, நாகம்மா, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.12.2006) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மணல்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
3ஆம் வட்டாரம், புங்குடுதீவு. மகேஸ்வரி (ஆசிரியை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.12.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.